Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 33
புதன்கிழமை 29 டிசெம்பர் 2021
மார்கழி 14 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை: 30/=

**கொரோனா**
நேற்று 467
மொத்தம் 584,586

**உயிரிழப்பு**
நேற்று 22
மொத்தம் 14,923

# ஆபத்தான நிலையில் இலங்கைத் தமிழர்கள்!



விரைவில் '13' ஐ நடைமுறைப்படுத்தவும் விக்னேஸ்வரன் எம்.பி. இந்தியாவிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெம்பர் 29

இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த ஆபத்தைத் தீவிரமாகக் கவனத்தில் கொண்டு, மிக விரைவாக 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கையை இந்தியா நிர்ப்பந்திக்கவேண்டும். அதற்கான தகுதியும், உரிமையும், கடமையும் இந்தியாவுக்கு இருக்கின்றது – என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

15

## பணியின்போது போதை: இரு பொலிஸார் பணிநீக்கம்

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 29
பணியின்போது மது போதையில் காணப்பட்ட, கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு

15

## கிளிநொச்சியில் மூதாட்டி கொலை!



- லண்டனில் இருந்து வந்தவர்
- பொதி செய்யப்பட்டு வீசப்பட்ட சடலம்
- சந்தேகநபர் கைது

கிளிநொச்சி, டிசெ. 29
லண்டனிலிருந்து வந்து கிளிநொச்சியில் தங்கியிருந்த குடும்பப் பெண், காணாமற்போயிருந்த நிலையில்,

15

## பாம்பு தீண்டிச் சாவு

அனலைதீவில் பரிதாபம்

யாழ்ப்பாணம், டிசெ. 29
பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர், சிகிச்சை பயனளிக்காது

14

முச்சந்தி முரளி



"பட்டத்தோட ஆக்களே பறந்து போற அளவுக்கு முன்னேறிட்டம். அப்ப இனி சர்வதேச அந்தஸ்து கிடைக்கத்தானே வேணும்...!"

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய

## முன்னாள் தலைவர், செயலாளருக்கு எதிராக மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை

யாழ்ப்பாணம், டிசெ.29
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் உள்ள சான்றுப் பொருள்களை பாரப்படுத்தவேண்டும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

(விரிவு மறுபக்கம்)

## வெடிபொருள்கள் மீட்பு



கிளிநொச்சி, டிசெ. 29
கிளிநொச்சி, குமாரசாமிபுரம் பகுதியில் செயலிழந்த நிலையில் துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்கள் நேற்று மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குமாரசாமிபுரம் பகுதியிலுள்ள ஆரம்பப்பி

15

## தெங்கு அ. அதிகார சபையின் வடக்கு அலுவலகம் பளையில்

ஜனவரியில் அமைக்கத் திட்டம்

கொழும்பு, டிசெ. 29
தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாண பிராந்திய அலுவலகம், பளையில் அமைக்கப்பட

14

## மாநகர முதல்வருக்கு எதிராக உறுப்பினர்கள் போர்க்கொடி!



யாழ்ப்பாணம், டிசெ. 29
யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணனுக்கு

14

விளையாட்டுத்துறை அமைச்சின் ஆதரவுடன்

## வல்வெட்டித்துறை பட்டப்போட்டி சர்வதேச பட்டத் திருவிழாவானது

யாழ்ப்பாணம், டிசெ. 29
யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா, இந்தமுறை இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை

15




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாதிய உத்தியோகத்தர் சங்கம் நாளை போராட்டம் !

யாழ்ப்பாணம், டிசெ.29
வடக்கு மாகாணம் முழுவதும் நாளை வியாழக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டமும், ஆர்ப்பாட்டப் பேரணியும் நடத்தப்படும் என்று அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பிரிவுத் தலைவர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்புடன் இணைந்து நாடளாவியரீதியில் நடத்தப்படும் தொழிற்சங்க நடவடிக்கையின் தொடர்ச்சியாக நாளை வடக்கு மாகாணம் முழுவதும் சுகாதாரத் தொழிற்சங்க உறுப்பினர்கள் போராட்டம் நடத்தவுள்ளனர். (எ-27)

## அருட்தந்தையர் பயணித்த வாகனத்தின்மீது தாக்குதல்

கிளிநொச்சி, டிசெ.29
அருட்தந்தையர்கள் பயணித்த வாகனம் ஒன்று இனந்தெரியாதவர்களால் வழிமறிக்கப்பட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கிளிநொச்சி, மயில்வாகனபுரத்தில் நடந்துள்ளது.
கிளிநொச்சியில் நத்தார் நிகழ்வுகளில் பங்கு கொண்ட அருட்தந்தையர்கள் கார் ஒன்றில் பயணித்துள்ளனர். மயில்வாகனபுரத்தில் காரை வழிமறித்த 10பேர் கொண்ட இளைஞர்குழு, பணம் கோரியுள்ளனர். அதற்கு அருட்தந்தையர்கள் மறுத்தபோது, மதுபோதையில் இருந்த அந்தக்குழு அருட்தந்தையர்கள் மீது தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளது. காரின்மீது தாக்குதல் நடத்தியுள்ளது. ஒருவாறு அங்கிருந்து அருட்தந்தையர்கள் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இது தொடர்பாக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-214)



# யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர், செயலாளருக்கு எதிராக மேல்நீதிமன்றில் குற்றப்பத்திரிகை

**யாழ்ப்பாணம், டிசெ.29**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் உள்ள சான்றுப்பொருள்களைப் பாரப்படுத்தவேண்டுமென்று- கொழும்பு மேல் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.**

2019ஆம் ஆண்டு மே 3ஆம் திகதி இராணுவத்தினர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்திலும், விடுதிகளிலும் பெருமெடுப்பில் சோதனைகளை முன்னெடுத்தனர். அதில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அறையில் இருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படம் மற்றும் இனப்படுகொலைகள் தொடர்பான சில பதாகைகள் போன்றவை இராணுவத்தினரால் கண்டெடுக்கப்பட்டன. அதையடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எம்.திவாகரன், செயலாளர் எஸ்.பபில்ராஜ் ஆகியோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இராணுவ அதிகாரியால் எழுத்துமூல ஆவணம் ஒன்று பொலிஸாரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அன்று இரவு யாழ்ப்பாணம் நீதிவானின் இல்லத்தில் மாணவர்கள் இருவரும் முன்னிலைப்படுத்தப்பட்டனர். மாணவர்கள் இருவர்மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் உப விதிகளின் கீழான ஏற்பாடு மற்றும் சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பட்டயம் ஆகிய நான்கு ஏற்பாடுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.
அதையடுத்து மாணவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிரான வழக்கைத் தள்ளுபடி செய்யும் விண்ணப்பத்தை நிராகரித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளை மீது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சீராய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.
நான்கு குற்றச்சாட்டுகளில் மேன்முறையீட்டு நீதிமன்றால் மட்டும் பிணை வழங்கக் கூடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை மீளப்பெறுமாறு கோப்பாய் பொலிஸாருக்கு சட்ட மா அதிபரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதை அடுத்து, மாணவர்கள் இருவரும் 13 நாள்களின் பின்னர் மே 16ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர். தற்போது இந் தச் சம்பவம் நடந்து சுமார் 30 மாதங்களின் பின்னர், அவர்கள் இருவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-27)

## கடன் செலுத்த பங்களாதேஷிடம் தவணை கோரியது இலங்கை

கொழும்பு, டிசெ.29
பங்களாதேஷ் வங்கியிடம் இருந்து இலங்கை பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.
கடனைத் திருப்பிச் செலுத்தும் மூன்று மாத கால அவகாசம் முடிவடைந்த நிலையில் இலங்கை அரசு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது என பங்களாதேஷ் வங்கி அறிவித்துள்ளது.
நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் பங்களாதேஷிடமிருந்து மூன்று தவணைகளின் அடிப்படையில் 200 மில்லியன் டொலர் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின்படி, பங்களாதேஷுக்கு கடன் தொகைக்கு வட்டியாக 2 சதவீதத்தை இலங்கை அரசு செலுத்தவேண்டும். ஆறு மாதங்களுக்குப் பின்னரும் தவணை நிதி செலுத் தப்படாமல் இருந்தால், 2.5 சதவீதம் மற்றும் கடன் தொகை திருப்பிச் செலுத்த வேண்டும். (எ-இ)

## இலங்கைக்கு வருகின்றார் சீன வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, டிசெ.29
சீன வெளிவிவகார அமைச்சர் வேன் வீ எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார். அவருடன் தூதுக்குழுவொன்றும் நாட்டை வந்தடையவுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.
நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட சீன உரகப்பல் தொடர்பில் அண்மையில் கருத்தாடல்கள் இடம்பெற்றன. அவ்வாறான பின்னணியில் சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கை வரவுள்ளார். (எ-இ)

# மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கு எரியூட்டி

### யாழ். மாநகரசபையில் தீர்மானம்



யாழ்ப்பாணம், டிசெ. 29
யாழ். மாநகரத்தில் மருத்துவக் கழிவுகளை முறைப்படி அகற்றுவதற்கான எரியூட்டியை பொருத்தமான இடத்தில் அமைப்பது என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது யாழ்ப்பாணம் மாநகரசபை.
யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் மாநகரசபை உறுப்பினர் குலேந்திரராஜாவால் மருத்துவக் கழிவுகளை முறைப்படி அகற்றுவதற்கான ஓர் எரியூட்டியை அமைக்க வேண்டும் என்ற பிரேரணை சபையில் கொண்டுவரப்பட்டது.
இதனையடுத்துக் கருத்து வெளியிட்ட மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், 'நிச்சயமாக இது அமைக்கப்பட வேண்டும். சுற்றுச்சூழல் அதிகார சபையின் அனுமதியுடன் மாநகர சபையின் ஆளுகைக் குட்பட்ட கோம்பயன் மணல் பகுதியில் அல்லது கல்லுண்டாய் வெளியில் இதனை அமைக்கலாம்' என்று தெரிவித்தார். சில உறுப்பினர்கள், குறித்த எரியூட்டியால் பொது மக்களின் சுகாதாரத்துக்குப் பாதிப்பு ஏற்படாமல் எரியூட்டி அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.
இதற்குப் பதில் வழங்கிய முதல்வர், சுற்றுச்சூழல் அதிகார சபையின் ஆலோசனைக்கு அமைவாக, பொது மக்களுக்கு எந்தப் பாதிப்புமின்றி பொருத்தமான இடத்தில் பொருத்தமான தொழில்நுட்ப வசதிகளுடன் எரியூட்டி அமைக்கப்படும்- என்றார்.
இதையடுத்து ஏகமனதாக குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (ம-125)

## ஜனவரியில் காத்திருக்கும் பெரும் மின் தட்டுப்பாடு!

கொழும்பு, டிசெ.29
நாட்டிலுள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு டொலரைப் பெற்றுக் கொள்ள முடியாவிட்டால், 2022ஆம் ஆண்டில் பெரும் மின் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என இலங்கை மின்சார சபை எச்சரித்துள்ளது.
ஜனவரி 24ஆம் திகதிவரையே எரிபொருள் கையிருப்பில் உள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிதியை இலங்கை மின்சார சபை பெறமுடியாவிட்டால், மின்உற்பத்தியில் பெரும் பிரச்சினையை எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரு. துறைமுக அபிவிருத்திக்கு இந்தியா – சீனா கடும் போட்டி!

கொழும்பு, டிசெ.29

**யாழ்ப்பாணம், பருத்தித்துறையிலுள்ள மீன்பிடித் துறைமுகத்தின் அபிருத்தித் திட்டத்தை பொறுப்பேற்று முன்னெடுப்பது தொடர்பில் இந்தியா - சீனா இடையே போட்டி நிலை உருவாகியுள்ளது என்று தெரியவருகிறது.**

கடந்த நல்லாட்சி அரசில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசு ஆகியவற்றின் நிதி உதவியுடன் பருத்தித்துறை துறைமுகத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான அடிக்கல் நடப்பட்டது. கொழும்பு துறைமுக திட்டத்துக்கு நிகராக வடக்கு மாகாணத்தில் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் பொருட்டு பெரும் நிதி முதலீட்டில் இந்த மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான வரைபடமும் தயாரிக்கப்பட்டது.

இந்தத் துறைமுகத் திட்டம் மூலம் வடக்கு மாகாணத்தில் உள்ள 109 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள 15ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், 35 ஆயிரம் வேலையற்ற இளைஞர், யுவதிகள் மற்றும் 15ஆயிரம் மாற்றுத்திறனாளிகள் பயனடைவர் என்ற எதிர்பார்ப்பில் திட்டவரைவு தயார் செய்யப்பட்டது. 4 வருடங்களுக்குள் நிறைவடையும் என்ற எதிர்பார்ப்பில் பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்தில் முதற்கட்ட வேலைகளுக்கான தயார்படுத்தல்கள் இடம்பெற்றன.

துறைமுகத் தளம் அமைப்பு மற்றும் அகழ்வு, கப்பல்கள், படகுகளை நிறுத்தும் வசதிகள், துறைமுகச் சுவர் அமைப்பு, வலை திருத்தும் மண்டபம், சனசமூக மண்டபம், சிற்றுண்டிச்சாலை, தனியார் விடுதிகள், துறைமுக முகாமையாளர் விடுதி, மேற்பார்வைக் கட்டம், ஏல விற்பனை மண்டபம், சுங்கக் கட்டடம், மருத்துவ முதலுதவி மையம், வாகனம் நிறுத்தும் பகுதி, பொது மலசல கூடம், கழிவு நீர் சுத்திகரிப்பு வசதி, எரிபொருள் வசதி, சுமைகளை இறக்கும் கட்டடம், மின் உற்பத்தி வசதி ஆகிய வசதிகளைக் கொண்ட பெரும் துறைமுகத் திட்டமாக வரைபடம் தயாரிக்கப்பட்டது .

இந்தத் திட்டத்தை செயற்படுத்த விடாது சிலர் கடிதப் பரிமாற்றங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் அனுப்பியிருந்தனர். ஆயினும் இந்தத் திட்டத்தை செயற்படுத்துமாறு பருத்தித்துறையைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தன.

தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தயாராக இருக்கின்ற நிலையில் இந்தியாவும் சீனாவும் ஒப்பந்த அடிப்படையில் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தைப் பொறுப்பேற்று செய்வதற்கான விருப்பங்களை வெளியிட்டுள்ளன என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பயில்வதற்காக கல்வியமைச்சால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுள், இதுவரை நேர்முகப் பரீட்சையில் தோற்றாத மாணவர்களுக்கு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கலைப்பீட சபையறையில் நேர்முகப் பரீட்சை இடம்பெறும்.

கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றுவதற்கான அனுமதியைப் பெற்ற மாணவர்கள், அதற்காகக் கல்வியமைச்சால் வழங்கப்பட்ட கடிதத்தை நேர்முகப் பரீட்சைக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

கலைப்பீட பீடாதிபதியின் அலுவலக தொலைபேசி எண்ணுக்குத் தொடர்பு கொண்டு (021-2223091) மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் வி. காண்டீபன் தெரிவித்துள்ளார். (ஒ-4இ)

## 25 சதவீத டொலரை விற்பதற்கு வணிக வங்கிகளுக்கு பணிப்பு!

கொழும்பு, டிசெ.29

வாடிக்கையாளர்களிடமிருந்து பணப் பரிமாற்றத்தின் மூலம் பெற்றுக்கொள்ளும் டொலரின் 25 வீதத்தை இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யவேண்டுமென்று இலங்கையிலுள்ள அனைத்து வணிக வங்கிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.



இது தொடர்பான கடிதத்தை அனைத்து வணிக வங்கிகளுக்கும் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்றுமுன்தினம் அனுப்பியுள்ளார்.

அவ்வாறான பணப் பரிமாற்றத்தின் மூலம் கிடைக்கும் டொலரின் 10 வீதத்தை மட்டுமே வணிக வங்கிகள் மத்திய வங்கிக்கு விற்பனை செய்ய வேண்டுமென்று இதுவரை இருந்த நடைமுறை தற்போது 25 சதவீதமாக மாற்றப்பட்டுள்ளது. இந்தப் புதிய நடைமுறை நேற்றுமுன்தினம் முதல் உடன் நடைமுறைக்கு வந்துள்ளது.

இலங்கையில் டொலர் கையிருப்பு மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் அரசு பெரும் நெருக்கடிகளை எதிநோக்கியுள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை, மத்திய வங்கியின் இந்த அறிவிப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கண்டனம் தெரிவித்துள்ளார். செழிப்பும், சிறப்பும் நிறைந்த நாட்டிலுள்ள அனைத்து வங்கிகளும், தாங்கள் பெறும் அமெரிக்க டொலரில் 25 வீதத்தை விற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. இலங்கை வணிக வங்கிகளின் நிகர வெளிநாட்டு நாணய இருப்பு ஏற்கனவே மோசமாகவுள்ள நிலையில் இவ்வாறானதொரு நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)




**தனக்கெடாச் சிங்களம் பிடரிக்குச் சேதமெண்டுவினம். ஆனால், இப்ப எல்லாத்துக்கும் சிங்களம் தேவை எண்டு கண்ணுக்குத்தெரியாத சட்டங்கள் வரத்தொடங்கிட்டு. அதிலையும் கவர்மெண்டில வேலை செய்யிற தமிழ் ஆக்கள் கட்டாயம் சிங்களம் படிச்சு பாஸ் பண்ணவேணும். அப்பதான் அவைக்கு சம்பள உயர்வாம். இல்லாட்டி அப்பிடியே மட்டையடிக்கவேண்டியதுதான். (ஆனால் சிங்கள ஆக்களும் இப்பிடி தமிழ் பாஸ் பண்ண வேணும் எண்டு ரூல்ஸ் இருந்தாலும் அவைக்கு சரியான விட்டுக்குடுப்பு இருக்காம்)**

**இப்பிடிச் சிங்களம் எல்லாத்துக்கயும் தேவை எண்ட மாதிரி வரேக்க,அதைப் படிப்பிக்கிறதுக்கும் கனபேர் வெளிக்கிட்டிருக்கினம். இப்பிடித்தான் ஒரு அமைப்பு, "இலவசமா சிங்களம் படிப்பிக்கிறம்" எண்டு ஆக்களைக் கூப்பிட்டு படிப்பிக்குது. ஆனால் அங்க போன பிறகு ஒவ்வொருத்தரிட்டையும் 20 ஆயிரம் ரூபா வாங்குகினமாம். 20 ஆயிரம் ரூபா வாங்கிக் கொண்டு எப்பிடி நாக்கூசாமல் "இலவசமாப் படிப்பிக்கிறம்" எண்டு சொல்லுகினம். இப்பிடி ஒரு மூண்டு நாலுவருசமா இந்த இலவச இருபதாயிரம் ரூபா கட்டணத்தோடதான் அங்க சிங்களம் படிப்பிக்கினம். அவ்வளவு காசு குடுத்து அங்க படிக்கத்தான் வேணுமோ?வேற இடங்களில இதைவிட கொஞ்சக் காசோட சிங்களம் படிக்கலாமே எண்டு சிலர் கேக்கலாம். அங்கதான் இருக்கு விசயம்.**

**மற்ற இடங்களில எக்ஸாமுக்காக மட்டும் சிங்களத்தைப் படிப்பிக்கினம். ஆனால் இஞ்ச சிங்களம் படிச்சால், அவைக்கு சிங்களம் படிப்பிக்கிற ஆசிரியர் "வேலை வாங்கித் தருவம்" எண்டு ஆசை காட்டுகினம். ஏனெண்டால் அதை நடத்துறவர் தனக்கும் அரசாங்க மேல் மட்டங்களுக்கும் கடும் நெருக்கம் எண்டு காட்டிக் கொள்ளுவார். அப்பிடி அரசாங்கத்துக்கு நெருக்கமானவர் "வேலை வாங்கித் தாறன்" எண்டு சொன்னால் அது உண்மையாத்தானே இருக்கும் எண்ட நம்பிக்கையில தான், கனபேர் இருபதாயிரம் போனாலும் பரவாயில்லை, சிங்கள ஆசிரியரா வந்தால் சரி எண்ட எண்ணத்தில அங்க சேர்ந்து படிக்கினமாம். அந்த அமைப்பை நடத்துறவரும் நாளைக்கு பிள்ளையாருக்கு கலியாணம் எண்ட கதையா, "இந்த வருசம் 100 பேருக்கு நியமனம் இந்த வருசம் 140 பேருக்கு நியமனம்" எண்டு அறிக்கைகளை அடிச்சு விடுறாராம். ஆனால் இதுவரை ஒருத்தருக்கும் அப்பிடி நியமனம் குடுபடேலையாம். எப்பிடியும் தங்களுக்கு சிங்கள ஆசிரியர் நியமனம் கிடைச்சிடும் எண்டு அங்க படிச்ச கனபேர் வெயிட் பண்ணிப் பார்த்து இப்ப இலவு காத்த கிளி மாதிரி ஏமாந்ததுதான் மிச்சமாம். இந்தத் தகவல் எல்லாம் இப்ப மேல் மட்டத்துக்கு ஆரோ போட்டுக் குடுத்திட்டினம் போல. அநேகமா கிட்டடியில அங்க இருந்து அந்த அமைப்பை நடத்துறவருக்கு அன்பான அழைப்பு வருமெண்டு பட்சிக்கு தகவல் கிடைச்சிருக்கு .**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 96 மில்லியன் ரூபா எங்கே? சுற்றாடல் அமைச்சில் பரபரப்பு

## *விசாரணைக்கும் உத்தரவு*



**கொழும்பு, டிசெ. 29**

**சுற்றாடல் அமைச்சால் வெளிநாட்டு நிதியுதவியுடன் செயற்படுத்தப்பட்ட திட்டத்தின்முடிவில் மீதமாக இருந்த 96 மில்லியன் ரூபா பணம் காணாமற் போயுள்ள நிலையில், இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர, சுற்றாடல் அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**

கடந்தஒருவருடமாகமுன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டம் கடந்தமூன்று மாதங்களுக்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டுள்ளது. திட்டச் செயற்பாடுகளின்பின்னர் எஞ்சிய 96மில்லியன் ரூபா பணம் பரப்புரைக்காகச் செலவிடப்பட்டுள்ளது என்று திட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அவ்வாறான விளம்பரங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என சுற்றாடல் அமைச்சில் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக உடனடியாகத் தகவல்களைப் பெற்று ஆராய்ந்து, விசாரணை நடத்துமாறு திட்டத்தில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (ம)

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு, டிசெ.29

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தனியாள் ஒப்பீட்டுச் சட்டத்துறையால் நடத்தப்படும் மனித வள முகாமைத்துவச் சட்டத்தில் உயர் தரச் சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்பவர்கள், க.பொ.த. சாதாரண தரத்தில் நான்கு திறமைச் சித்திகள் பெற்றிருக்கவேண்டும். அத்துடன் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி அல்லது க.பொ.த. உயர்தரத்தில் பொது ஆங்கிலத்தில் சாதாரண சித்தியும் பெற்றிருத்தல்வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை, law.cmb.ac.lk எனும் இணையத்தளத்தில் பெற்று, ஜனவரி 30 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்க முடியும். (ஒ-ரி1)

⅄ ⅄ ⅄

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவ பீடத்தால் நடத்தப்படும் பொதுமுகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை, எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விவரங்களை http.//mgt.sjp.ac.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். (ஒ-ரி1)



## நூல் வெளியீட்டு விழா

வவுனியா, டிசெ. 29

"வவுனியம்05" என்ற கலை இலக்கியப் பண்பாட்டுநூல் வெளியீடு, நேற்றுக் காலை 9.30 மணிக்கு வவுனியா மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலர் நா.கமலதாசன் தலைமையில், இடம்பெற்ற நிகழ்வில், முதன்மை அதிதியாக வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைக்க, நூலின் முதற்பிரதியை தமிழ்மணி கே.மேழிக்குமரன் பெற்றுக்கொண்டார்.

அத்துடன், நூலின் ஆய்வுரையை ஆசிரியர் சி.வரதராஜனும் பதிலுரையை நூலாசிரியர் வீ.பிரதீபனும் நிகழ்த்தியிருந்தனர்.

வவுனியா பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், சிறப்பு அதிதிகளாக கலாபூஷணம் இ.சிவசோதி, தமிழ்நிதி அருணா செல்லத்துரை, கலாநிதி நா.செந்தூர்ச்செல்வன், உதவி மாவட்டச் செயலர் சபர்ஜா, உதவிப் பிரதேச செயலர் ச.பிரியதர்சினி, எனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-ரி1-110)

## மக்களைப்பற்றி அரசுக்கு எந்த அக்கறையுமில்லை!

### *சஜித் சாட்டை*



கொழும்பு, டிசெ. 29

பொதுமக்களைப் பற்றியோ அவர்களின் நலன்களைப்பற்றியோ அரசுக்கு எந்த அக்கறையுமில்லை என்று தெரிவித்தார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள்முதல் முதல்தர குற்றவாளிகளும், உற்ற நண்பர்களும், மிகப் பெரிய மோசடியாளர்களும் எந்தக் கவலையுமில்லாமல் சுகபோகமாக வாழத் தொடங்கிவிட்டனர். ஆனால், மக்களைத்தான் இந்த அரசு வதைக்கின்றது. தியாகங்களைச் செய்யுமாறு கேட்கின்றது.

அரசாங்கத்தின் ஒருகுழு மக்களை 'கொஞ்சம் சாப்பிடுங்கள்' என்று கேட்கின்றது. 'ஒரு வேளை உணவைக் குறைத்துச் சாப்பிடுங்கள்' என்று இன்னொருகுழு கேட்கின்றது. இன்னும் கொஞ்ச நாள்களில் 'சாப்பிடாமல் இருங்கள்' என்றும் மக்களைக் கோருவார்கள் - என்றார். (ம)



## நகரப்பகுதியில் நாய்கள் தொல்லை

சாவகச்சேரி,டிசெ.29

சாவகச்சேரி நகரப்பகுதியில் கட்டாக்காலி நாய்களால் தினமும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அண்மையில் பெய்த மழையால், வளர்ப்பு நாய்கள் வீதிகளில் தஞ்சமடைந்துள்ளன. இவை வீதியில் செல்வோரைக் கடித்துக் காயப்படுத்துகின்றன.

தங்கள் காணிக்குள் நாய்களைக் கட்டிவைக்க முடியாதுள்ளதால், அவற்றை அவிழ்த்து விட்டுத் தினமும் இரவு வேளையில் நாய்களுக்கு உணவு போடுகின்றோம் என்று உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4-9)

# மதகுகள் அமைக்கப்படாமல் சீர்செய்யப்படும் பிரதான வீதி!

யாழ்ப்பாணம், டிசெ. 29

மானிப்பாய்ப் பகுதியில் இருந்து காரைநகர் வரைக்குமான பிரதானவீதி, காப்பெற் வீதியாக மாற்றப்படும் நிலையில் மதகுகள் அமைக்கப்படாமல் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இரண்டு நிறுவனங்களிடம் ஒப்பந்தம் வழங்கப்பட்டு சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், குறித்த வீதியின் மானிப்பாய்ப் பகுதியிலிருந்து காரைநகர் வரையான மதகுகள் புனரமைக்கப்படாது வீதிகளை மாத்திரமே காப்பெற் வீதியாக மாற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்தவீதி அபிவிருத்தி முறையற்றது. மதகு களைக் கட்டாது வீதியை மட்டும் சீரமைத்தால் பின்னாள்களில் வீதி உடைப்பெடுக்கும் என்று வலி. தென்மேற்கு, வலி. மேற்கு பிரதேசசபைகள் சுட்டிக்காட்டி யிருந்தன.

தற்போது குறித்த வீதியின் மானிப்பாய் தொடக்கம் சண்டிலிப்பாய் வரையான இடைப்பட்ட பகுதிகள் காப்பெற்றாக மாற்றப்பட்டுள்ளன. எனினும் மதகுள் அமைக்கப்படவில்லை. எனவே இந்த முறையற்ற அபிவிருத்திக்கு இடம்கொடுக்காமல் குறித்த மதகுகளைச் சரியான முறையில் அமைத்து, அதன் பின் வீதியைச் சீரமைக்க வேண்டும் என்று அந்தப் பகுதியால் பயணிக்கும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-125)

## யாழ்ப்பாணம் மாநகர சபையினர் இரு மாவட்டங்களுக்கு களப்பயணம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

திருகோணமலை மற்றும் மாத்தறை மாவட்டங்களிலுள்ள மாநகர சபைகளுக்குச்சென்று, அங்கு இடம்பெறுகின்ற நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் அதன் நடைமுறைகளை, யாழ்ப்பாண மாநகர சபையினர் நேரில் ஆராயவுள்ளனர்.

யாழ். மாநகர முதல்வரால் சபையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தைஅடுத்து, மாநகர முதல்வர், அதிகாரிகள் உட்பட சபையின் 45 உறுப்பினர்களும் களப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

மாநகர சபையின் துணைச் சட்டங்கள்போதாது. மேலதிக சட்டங்களை இயற்ற வேண்டிய காரணம் மற்றும் தேவைப்பாடுள்ளது. எனவே அதற்குப் பொருத்தமான சட்ட ஏற்பாடுகளை, சட்ட ஆலோசனைகளை மேற்கொள்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் சபையில் தெரிவித்தார். (ஒ-4-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மீடியா'வை உள்ளே அனுமதிக்க முடியாது

*வவுனியா மருத்துவமனை அடாவடி*

வவுனியா, டிசெ. 29

வவுனியா மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள உறவினருக்கு, தேவையான பொருள்களை வாங்கிச்சென்ற ஊடகவியலாளரை அவரது தொழிலை குறிப்பிட்டு மருத்துவமனைக்குள் அனுமதிக்கமுடியாது என காவலாளிகள் தடுத்துநிறுத்தியுள்ளனர்.

வவுனியா, பூவரசங்குளம்பகுதியில் வசிக்கும் நபர் ஒருவர் சுகவீனமடைந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு உதவுவதற்காகச் சென்ற உறவினரான குறித்த ஊடகவியலாளரை தடுத்துநிறுத்திய காவலாளிகள் நீங்கள் ஊடகவியலாளராக இருப்பதால் உள்ளே அனுமதிக்கமுடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

தமது மேலதிகாரி ஊடகவியலாளர்களை உள்ளே அனுமதிக்கவேண்டாமென தங்களுக்கு உத்தரவு வழங்கியுள்ளதாகவும் குறித்த காவலாளிகள் தெரிவித்துள்ளனர்.

தான் பணிநிமித்தம் வரவில்லை என்று குறித்த ஊடகவியலாளர் அவர்களிடம் தெரிவித்தும் அவர்கள் அவரை உள்ளே அனுமதிக்கவில்லை.

குறித்தவிடயம் தொடர்பாக அறிவதற்கு மருத்துவமனையின் பணிப்பாளருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியபோதும் அவரைத் தொடர்புகொள்ள முடியவில்லை. (ம-110)

*மக்களின்*

# குருதியை உறிஞ்சுவோர் குருதிப் போக்கால் இறப்பர்



**கொழும்பு, டிசெ. 29**

**'மக்களின் குருதியை உறிஞ்சுபவர்கள் குருதிப்போக்கு ஏற்பட்டே மரணிப்பார்கள். இவ்வாறு ஐக்கிய பிரஜைகள் ஒன்றியத்தின் ஒருங்கமைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"கடந்த இரு தினங்களுக்குள் அரசிலுள்ளவர்கள் உட்கொண்ட உணவு தொடர்பான விடயங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியிருந்தன. அவர்கள் உட்கொண்ட உணவுகள் சமிபாடு அடையுமா என்றே கேட்கவிளைகின்றோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-22)

## எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் சீரடையும்

*லிட்ரோ நிறுவனம் அறிக்கை*

கொழும்பு, டிசெ. 29

சந்தையில் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் கூடிய விரைவில் சீர்செய்யப்படும் என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் லிட்ரோ நிறுவனம் மேலும் தெரிவிக்கையில்;

நீலம் மற்றும் கறுப்பு முத்திரைகள் கொண்ட எரிவாயு சிலிண்டர்களை மீண்டும் இணைக்கும் மற்றும் அகற்றும் நீண்ட செயல்முறை காரணமாக உற்பத்தி செயல்முறையின் வேகம் குறைந்துள்ளது. எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்கும் செயன்முறையை விரைவுபடுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் எரிவாயு சிலிண்டர்கள் தாமதமின்றி வழங்கப்படும். இலங்கைத் தர நிர்ணய நிறுவனம் மற்றும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் நியமங்கள் மற்றும் மேற்பார்வைக்கு உட்பட்டு, நாளாந்தம் 30 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் தற்போது வழங்கப்படுகின்றன என்று லிட்ரோ நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## உதயனின் பிரதம ஆசிரியர் கானமயில்நாதனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், டிசெ. 29

உதயனின் பிரதம ஆசிரியர் அமரர் ம.வ.கானமயில்நாதனுக்கான அஞ்சலி நிகழ்வு நாளை 30ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அவரது சொந்த ஊரான வட்டுக்கோட்டையில், வட்டு.இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை ஊடகவியலாளர்கள் மற்றும் ஊரவர்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், கல்வியியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்துவர். இதில் அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ம)

*வவுனியா - பூந்தோட்டம் மயானம்*

## சடலங்களை எரியூட்டுவதற்கு எரிவாயுவுக்குப் பற்றாக்குறை!

*தவிசாளரின் தலையீட்டால் தற்காலிகமாகச் சீரானது*

வவுனியா, டிச. 29

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக வவுனியா பூந்தோட்டம் மயானத்தில் கொரோனாவால் இறப்பவர்களின் சடலங்களை எரியூட்டும் பணியில் தொய்வு ஏற்பட்ட நிலையில் தவிசாளர் கௌதமனின் முயற்சியால் குறித்த சிரமங்கள் சீர்செய்யப்பட்டன.

தற்போது நாட்டில் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து சடலங்களை எரியூட்டும் பணியில் தடங்கல் ஏற்பட்டுள்ளதுடன் மன்னார் மாவட்டத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒரு சடலம் எரிவாயு இன்மையால் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக கரிசனை கொண்ட நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன், வவுனியா மாவட்டச்செயலாளருடன் அவசரமாக கலந்துரையாடியதையடுத்து தற்காலிகமாக சில எரிவாயு சிலிண்டர்கள் மாவட்டச் செயலரால் வழங்கப்பட்டு, எரியூட்டும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. (ம-110)

## முச்சக்கரவண்டி மோதி இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ.29

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டியார் மடத்தில் நேற்று முன்தினம் இரவு, இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதியதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், பொன்னாலை ,பருத்தித்துறை பிரதான வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவரே படுகாயமடைந்து யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-ரி1-125)

## இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.29

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்படும் இளஞ்சைவப் புலவர் மற்றும் சைவப்புலவர் 2022 ஆம் ஆண்டு பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள், சைவபரிபாலனசபையால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேசபால பண்டிதர் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை (இந்து சமயம் அல்லது இந்து நாகரிகம் உட்பட) களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது சைவசமய அறிவு அனுட்டானங்களை அனுஷ்டித்து வரும் 40 வயதுக்கு மேற்பட்டோரும், சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள், பல்கலைக்கழக பட்டம், இளஞ்சைவப்புலவர் தேர்வு, சித்தாந்த பண்டிதர் தேர்வு (சைவபரிபாலனசபை), பண்டிதர் தேர்வு (ஆரிய திராவிட பாஷா விருத்திச்சங்கம்) ஆகியவற்றில் ஏதேனுமொன்றில் சித்தி பெற்றிருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள், 100 ரூபா செலுத்தி விதிகள் பாடத்திட்டத்துடன் விண்ணப்ப படிவத்தைப் பெற்று பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவை இலங்கை வங்கியில், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் கணக்கு இல 1133272க்கு வைப்பிலிட்டு பற்றுச்சீட்டுடன் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாக சைவப்புலவர் ஏ.அனுசாந்தன், தேர்வுச் செயலாளர், அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் இல.153, கே.கே. எஸ்.வீதி கொக்குவில் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

விண்ணப்பப்படிவத்துடன் வங்கிப்பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பிந்திய விண்ணப்பங்கள் மேலதிக அறவீட்டுக் கட்டணம் 100 ரூபாவுடன் 31ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அதற்குப் பிந்திய விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. (ஒ-ரி1)

# நிறைவேற்றப்பட்டது வவு. வடக்கு பட்ஜெட்!

வவுனியா, டிச.29

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வசம் சென்ற வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 4 மேலதிக வாக்குகளால் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வசமிருந்த வவுனியா வடக்கு பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் முன்னாள் தலைவர் சு.தணிகாசலத்தால் இரு தடவைகள் முன்வைக்கப்பட்டு தோல்வியடைந்தது.

அதையடுத்து புதிய தவிசாளர் தெரிவு அண்மையில் நடத்தப்பட்டபோது, திருவுளச்சீட்டுமூலம் தவிசாளர் பதவி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குச் சென்றது. தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்ட த.பார்த்தீபன் நேற்றுமுன்தினம் சபையில் புதிய வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார். வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதங்களின் பின்னர் உறுப்பினர்கள் சிலர் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று கோரியதை அடுத்து, இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 15 வாக்குகளும், எதிராக 11 வாக்குகளும் கிடைத்தன. இதன்மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது ஆட்சியை வவுனியா வடக்கு பிரதேசசபையில் நிலைநிறுத்திக் கொண்டது. (எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சிநெறி

சாவகச்சேரி, டிசெ.29

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற ஆடை வடிவமைத்தல் ஓராண்டு பயிற்சி நெறி, கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை, அலுவலக நேரத்தில் கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். (ஒ-ரி1-159)

## ஆதனவரி செலுத்தல்

சாவகச்சேரி, டிசெ.29

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு 2022 ஆம் ஆண்டுக்குரிய ஆதனவரியை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 10 வீத கழிவுடன்செலுத்தலாம் என சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

ஆதனவரி செலுத்துவதற்குரிய படிவங்கள் இதுவரை கிடைக்காதவர்கள் ஆதனவரிப் பிரிவு அல்லது நடுக்கட்டல் உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். (ச-9)

# இந்துக்களின் மரபுரிமைகளை பாதுகாப்பதற்குத் தீர்மானம்

வவுனியா,டிசெ.29

இந்துக்களின் பூர்வீக தொல்லியல் மரபுரிமைகளை உறுதிசெய்து, அவற்றைப் பாதுகாப்பது தொடர்பில் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.



இலங்கையின் அனைத்து பிராந்தியங்களிலிருந்தும் சைவ அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டம், வவுனியா கோவில்குளம் சிவன் கோவிலில் இடம்பெற்றது. கூட்டத்தில் யாப்பு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

ஆலயம் சமூகமையம் எனும் எண்ணக்கருவை உறுதிப்படுத்தி, பிணக்குகளை சுமுகமாகத் தீர்த்து, பொது ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல், சைவ அமைப்புக்கள் தங்கள் சுயாதீனத்தை பேணியவாறே பொது வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல், ஆன்மிக, வாழ்வியல் முன்னேற்றங்களுக்கு உழைத்தல், சைவத்துடன் தொடர்புபட்ட கலைகளான பரதம், பண்ணிசை, கூத்து, யோகாசனம், சித்த மருத்துவம், இயற்கை விவசாயம் என்பவற்றின் வளர்ச்சியில் பங்காற்றல், சிறார்களின் அறநெறி மேம்பாட்டுக்கு உதவுதல், சிறார் இல்லங்களின் வளர்ச்சியில் பங்களித்தல், விசேட தேவைப்பாடுடைய மக்களின் வாழ்வியல், மருத்துவக் கல்வி, போசாக்கு நடவடிக்கைகளில் உதவும்வகையில் சைவ அறப்பணி நிதியத்தை உருவாக்கல், ஏற்கனவே அமைப்புக்கள், ஆலயங்களால் முன்னெடுக்கப்படுபவற்றை வலுப்படுத்தல், சைவர்களின் தார்மீக உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தல், சைவத் தமிழ் மறுமலர்ச்சிக்கு தேவையான சகல வேலைத்திட்டங்களையும் ஒன்றிணைந்த கட்டமைப்பாக முன்னெடுத்தல் உள்ளிட்ட பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. (ஒ-4-125)




## எரிவாயு வெடிப்பைத் தடுக்கும் உபகரணத்தை கண்டுபிடித்த மாணவன்

அம்பாறை,டிசெ.29

கல்முனை மாணவன் ஒருவர் தற்போதைய கால கட்டத்துக்கு அவசியமான புதிய உபகரணத்தைக் கண்டுபிடித்துள்ளார்.

நாட்டின் பல பாகங்களிலும் எரிவாயு சிலிண்டர் (அடுப்பு) வெடிப்புச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில், இதற்குத் தீர்வாக கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையில் தரம் 11 இல் கல்வி பயிலும் பாண்டிருப்பைச் சேர்ந்த பத்மநாதன் லதேஸ் என்ற மாணவன் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு நடைபெறாமல் தடுப்பதற்கான புதிய கண்டுபிடிப்பை உருவாக்கியுள்ளார்.

இதன்மூலம், எரிவாயு அடுப்பு வெடிப்பதைத் தடுப்பது மட்டுமன்றி, மேலதிகமாக கசிவிலுள்ள எரிவாயுவையும் மீதப்படுத்தமுடியுமென்று கண்டுபிடிப்பாளரான லதேஸ் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## புது வருடத்தில் மீட்சி

### ரஞ்சன் நம்பிக்கை

கொழும்பு,டிசெ.29

புதிய வருடத்தில் விடுதலையாகி உயர் கல்வியை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளேன் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ரஞ்சன் ராமநாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில், சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சனை, நாடாளுமன்ற உறுப்பினரான ஹரின் பெர்னாண்டோ சந்தித்தார்.

2022ஆம் ஆண்டு தான் விடுதலையாகி உயர்படிப்பில் ஈடுபடுவேன் என்று ரஞ்சன் என்னிடம் கூறினார். அவருக்காக எனது ஆசனத்தை வேண்டுமென்றால் தியாகம் செய்வதில் நான் மகிழ்ச்சியடைவேன். அவர் விடுவிக்கப்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளலாம் என்று ஹரின் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

# பெருந்தொற்றுக்கள் இன்னும் உருவெடுக்கும்

### ஐ.நா.எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.29

கொரோனாவைவிட, இன்னும் பெருந்தொற்றுக்களை எதிர்கொள்ள நாம் தயாராகவேண்டுமென்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா என்பது மனித இனம் சந்திக்கும் கடைசிப் பெருந்தொற்று அல்ல. இன்னும் நிறைய பெருந்தொற்றுக்கள் வரும். கொரோனாவைக் கட்டுப்படுத்த நாம் நடவடிக்கை எடுக்கும்போதே, அடுத்த பெருந்தொற்றுக்குத் தயாராகவேண்டும் - என்றுள்ளார். (ஒ-4-இ)



## ஒரு தொகுதி பைஸர் நேற்று இலங்கைக்கு

கொழும்பு, டிசெ. 29

பூஸ்டர் தடுப்பூசித் திட்டத்துக்கு உதவும் வகையில் பைஸர் தடுப்பூசிகளின் மற்றொரு தொகுதி நேற்றுக் காலை நாட்டுக்கு வந்துள்ளன.

அதன்படி 137 பெட்டிகளில் அடைக்கப்பட்ட தடுப்பூசிகள் அமெரிக்காவில் இருந்து நெதர்லாந்துக்கும் பின்னர் அங்கிருந்து ஐக்கிய அரபு இராச்சியத்தின் வழியாக இலங்கைக்கும் கொண்டுவரப்பட்டுள்ளன. (ம)


# இலங்கையர்களுக்கு ஜப்பானில் தொழில்

இலங்கையர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஜப்பானுக்கும் இலங்கைக்கும் நீண்ட நட்பு வரலாறுஉண்டு. இலங்கைக்கு ஜப்பான் எப்போதும் ஆதரவளித்து வருகின்றது. இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்குத் தேவையான ஆதரவை வழங்க முடியும் என நாங்கள் நம்புகின்றோம்.

அதிகளவான ஜப்பானிய சுற்றுலாப்பயணிகளை இலங்கைக்கு வரவழைக்கவும், இலங்கை இளைஞர்களுக்கு ஜப்பானில் அதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

தற்போது இலங்கையில் ஜப்பானால் செயற்படுத்தப்பட்டு வரும் ஜப்பானிய திட்டங்களைத் தொடரவும் எதிர்பார்க்கின்றோம். ஜப்பானிய முதலீட்டாளர்கள் ஊடாக இலங்கையில் முதலீடுகளை அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம்-என்றார்.(ஒ-4-இ)



# கீரிமலைக்கேணி புதுப்பொலிவுடன்

யாழ்ப்பாணம்,டிசெ.29

வரலாற்றுச் சிறப்புமிக்க நகுலேஸ்வரம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் தீர்த்தக் கேணிகள் புராதன இதிகாசக் கதைகளுடன் தொடர்புபட்டதாகவும் காணப்படுகின்ற நிலையில் கீரிமலை புனித தீர்த்தக்கேணி புதுப்பொலிவுடன் [illegible]மைக்கப்படுகின்றது.

வலி.வடக்கு பிரதேசசபையின் நிதி ஒதுக்கீட்டில், புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆடி அமாவாசை மற்றும் நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் தீர்த்தோற்சவத்தின் போது ஏராளமான அடியவர்கள் நீராடுவதோடு, வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற ஓர் ஆன்மிகரீதியான சுற்றுலாத் தலமாகவும் இது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஓய்ந்தது நீதிக்கான குரல்...!

தமிழர்கள் தமது பூர்வீக நிலத்தில் சகல உரிமைகளுடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்காக மேற்கொண்ட உரிமைப்போராட்டம் மிகமோசமான முறையில், போர் நெறிகளுக்கு முரணான வகையில் பெரும் குருதிச் சகதியோடு முடித்து வைக்கப்பட்டது. இதன்போது உலகில் தடைசெய்யப்பட்ட அத்தனை ஆயுதங்களையும் பயன்படுத்தி ஆயுதமேந்தாத ஆயிரக் கணக்கான அப்பாவி மக்களை பௌத்த பேரினவாதம் தன் தோழமை நாடுகளுடன் சேர்ந்து கொன்றொழித்தது. இந்த மனிதப் படுகொலைக்கான நீதிகோரிய நெடும் பயணத்தை சர்வதேசத்தை நம்பியே தமிழினம் ஆரம்பித்தது. இந்த நீதிக்கான பயணத்தில் சக பயணியாக மட்டுமன்றி ஒரு வழிகாட்டியாகவும் காப்பானாகவும் செயற்பட்டவரான தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பேராயர் டெஸ்ட்மன்ட் டுட்டுவை இப்போது நாம் இழந்திருக்கின்றோம்.

அமைதிக்கான நோபல் பரிசிலை வென்றவரான பேராயர் டுட்டு, தமிழர் ஆதரவுத் தளத்தை உருவாக்குவதற்கும் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு எதிராக நீதி தேடுவதற்கும் சர்வதேச மட்டத்தில் இயங்கிய ஓர் ஒப்பற்ற சக்தி. இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமல்ல சர்வதேச அளவில் ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும், நீதி தேவைப்படுவோருக்காகவும் அயராது இனம், மதம் என்ற வரையறையைக் கடந்து டுட்டு குரல்கொடுத்தார்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பெரும்பாலான மதத்தினருக்கு இஸ்ரேல் ஒரு 'கனவு தேசம்', இதனால் தானோ என்னவோ பலஸ்தீனத்திலும் காஸா முனையிலும் யூதர்களால் (இஸ்ரேலின் வாழும் பெரும்பான்மை இனத்தவர்கள் யூதர்கள்) பலஸ்தீனர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட – விடப்பட்டுக் கொண்டிருக்கின்ற அத்துமீறல்களை எவரும் அவ்வளவு தீவிரமாகக் கண்டிப்பதில்லை. கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீடமான வத்திக்கானும்கூட, 'காஸா முனையில், பலஸ்தீனத்தில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும்' என்ற சாரப்பட்ட வெறும் அறிக்கைகளைத்தான் இந்த விவகாரத்தில் உச்ச பட்சத் தலையீடாகக் கொண்டிருந்தது – கொண்டிருக்கின்றது. இந்த 'எழுதப்படாத' வரையறையை – விதிமுறையை சல்லடையாக்கிய பெருமை பேராயர் டுட்டுவைச்சாரும். 'மக்களைப் பாகுபடுத்தும் உங்களின் முதலீடுகளை திரும்பப் பெறுங்கள். இதனால் இழப்பு அப்பாவிகளுக்கே' என்று பலஸ்தீன எதிர்ப்பு மனோநிலையாளர்களின் முகத்தில் ஓங்கி அறைந்தவர் பேராயர் டுட்டு.

ஆனால், இவ்வளவு பெரியதொரு சர்வதேச சக்தியை ஈழத் தமிழர்களின் விவகாரத்தில் கரிசனை கொண்டவராக தமிழர்களுக்கு எதிரான படுகொலைகளுக்கு நீதி தேடிய ஓர் ஒப்பற்ற சர்வதேசக் குரலை வடக்கு – கிழக்கில் தமிழர்களின் பிரதிநிதிகள் என்று தம்பட்டமடிக்கும் நபர்கள் எவ்வளவுதூரம் சரிவரப் பயன்படுத்திக் கொண்டனர்? இறுதிவரை எத்தனை தடவைகள் அவருடன் சந்திப்பை நடத்தினர்? டுட்டுவை வைத்து தமிழர்களுக்கான ஆதரவுத் தளத்தை பிரமாண்டமாகக் கட்டியெழுப்பக்கூடிய அத்தனை வாய்ப்புக்கள் இருந்தபோதிலும் அவற்றில் எத்தனை வாய்ப்புக்களை எம்மவர்கள் சரிவரக் கையாண்டனர்? இவற்றையெல்லாம் சுயபரிசீலனை செய்யவேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

டுட்டு போன்றவர்களைத் துணையாகக் கொண்டு இனப்படுகொலைக்கான நீதிகோரிய குரலை இன்னும் பலப்படுத்தியிருக்கவேண்டும். அதுதான் உண்மையான இராஜதந்திரமும்கூட. ஆனால், எம்மவர்கள் தங்களது கதிரைகளைக் காப்பதிலும் அடுத்தவர்களின் கால்களை வாருவதிலும்தான் கவனமெடுத்திருக்கிறார்களே தவிர, அராஜகத்தின் இருளிலிருந்து எம்மை மீட்க கைநீட்டிக் கொண்டிருந்த டுட்டு போன்ற நீதியின் மீட்பர்களை சற்றேனும் கண்டுகொள்ளவில்லை.

இனியாவது பேராயர் டுட்டு போன்ற நீதிக்கான பயணத்தின் தோழமைகளை இனங்கண்டு. அவர்களின் கரங்களை இறுகப் பற்றிக்கொள்ள முயற்சிப்போமா...?




# நீதிமன்றத்துக்கு செல்வதாயின் பதவியை விட்டுச் செல்லுங்கள்

### அமைச்சர்களுக்கு கோத்தாபய "டோஸ்"



**கொழும்பு, டிசெ.29**

**அமைச்சரவைத் தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றத்துக்குச் செல்வதாக இருந்தால், அமைச்சுப் பதவியில் இருந்து விலகிவிட்டு அதைச்செய்யவேண்டுமென்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றனர். அமைச்சரவையின் தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றத்துக்கு செல்வதும், அமைச்சரவையில் இருக்கும்போது அந்தத் தீர்மானத்தை விமர்சிப்பதும் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறும் செயலாகும்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பி.பீ.ஜயசுந்தரவின் செயற்பாடுகளை சில அமைச்சர்கள் பகிரங்கமாக விமர்சிப்பது தவறானது. இவற்றுக்கெல்லாம் ஒரு அதிகாரியே காரணம் என்ற தவறான எண்ணத்தை மக்கள் மத்தியில் இது ஏற்படுத்திவிடும்.

நல்லெண்ணத்தில் ஆரம்பித்த இயற்கை விவசாயத் திட்டத்துக்கு விவசாய அமைச்சு எந்தவித ஆதரவையும் வழங்கவில்லை. விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் மட்டும் அதைச் செய்யமுடியாது.

கொரோனா நெருக்கடி காரணமாக பொருளாதார நெருக்கடியும் டொலர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. இது எமக்கு மாத்திரமன்றி உலகத்துக்கே துரதிர்ஷ்டவசமான நிலை. எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு மாதாந்தம் 360 மில்லியன் டொலரும், நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கு வருடத்துக்கு 3 பில்லியன் டொலரும் செலவாகும். அதைப் பொருளாதாரத்தால் தாங்கிக்கொள்ள முடியாது. இந்த நிலைமையைப் போக்குவதற்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்த வேண்டும் - என்றார்.

(எ-இ)

# அரசமைப்பு உருவாக்கத்தை பெரமுனதான் தடுக்கின்றது!

### விமல் வீரவன்ஸ 'பளார்' கருத்து

கொழும்பு, டிசெ. 29

புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் ஜனாதிபதியின் முழுமையான ஈடுபாடு இருந்தாலும்கூட, அரசாங்கத்தின் பிரதான கட்சியே அதனைத் தடுக்கும் விதத்தில் செயற்படுகின்றது என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டின் நெருக்கடி நிலைமையில் அரசாங்கம் எடுக்கும் சில முக்கிய தீர்மானங்கள் குறித்து எம்மிடத்தில் இணக்கப்பாடு இல்லை. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவும், மக்கள் எதிர்பார்க்கும் ஆட்சியை உருவாக்கவுமே அரசுக்குள்ளும் அமைச்சரவைக்குள்ளும் இருந்து போராடுகின்றோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தை பெரமுனவினர்தான் தடுக்கின்றனர். புதிய அரசமைப்பை உருவாக்குவேன் எனவும், அதனை ஒருவருட காலத்துக்குள் பூர்த்தி செய்வேன் எனவும் ஜனாதிபதி எமக்கும், நாட்டுக்கும் வாக்குறுதியளித்துள்ளார். நீதி அமைச்சரின் ஊடாக நாடாளுமன்றத்துக்கும் வாக்குறுதியளித்துள்ளார். அவருக்கு புதிய அரசமைப்பை உருவாக்கும் நோக்கம் உள்ளது. பெரமுனவினர்தான் அதைத் தடுக்கின்றனர் - என்றார். (ம)

**நாளை** 30.12.2021 வியாழக்கிழமை மார்கழி 15

சுபநேரம் : மு.ப. 07.59 - பி.ப. 09.29
ராகுகாலம் : பி.ப. 01.59 - பி.ப. 03.29

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருட முற்பணமாக ரூ.10,000 வழங்குக

## நிதியமைச்சிடம் கோரிக்கை

**கொழும்பு,டிசெ.29**

**அரச ஊழியர்களுக்கான புதுவருட விசேட முற்பணத்தை, தற்போதைய பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென்று இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாணச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

நிதியமைச்சு மற்றும் பொது நிர்வாக அமைச்சு என்பவற்றின் செயலாளர்களுக்கு இந்தக் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களுக்கு புதுவருட முற்பணம் வழங்கப்படுவதன் பிரதான நோக்கம், ஊழியர்களது பிள்ளைகளுக்குரிய பாடசாலைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே. அரசு அறிவித்துள்ள 4 ஆயிரம் ரூபாவைக் கொண்டு, தற்போதைய பொருளாதார நெருக்கடியில் எதனையும் செய்துகொள்ள முடியாது. எனவே, முற்பணத்தை 10 ஆயிரம் ரூபா வரை அதிகரிப்பதன் மூலமே, தேவைகளை ஊழியர்களால் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ-4-இ)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 . 01 . 1946



உதிர்வு 09 . 01 . 2021

அமரர் தர்மலிங்கம் திருநாவுக்கரசு
(ஓய்வுநிலை அதிபர்)
(திதி: அபரபக்க மார்கழி மாத ஏகாதசி - 29.12.2021)

அன்புடன் அரவணைத்து
அறிவுரைகள் பல சொல்லி
பாரினிலே பண்புடன் வாழ
வழி சொல்லி வாழ வைத்த
எங்கள் அப்பா
அழுகின்றோம் இன்றும்
காலனவன் கொடிய
நோயுருவில் உம்மை
கொண்டு சென்றதனால்...
உங்கள் நினைவலைகள்
எங்கள் இதயங்களில்
எம்மை விட்டு
நீங்காத விழுதுகளாய்....

உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்தி பெற துதிக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உஆம் ஒழுங்கை, சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(CR 8367)1-6




## நடிகை நிரஞ்சனிக்கு கலாகீர்த்தி பட்டம்

கொழும்பு,டிசெ.29

இலங்கையின் தமிழ், சிங்கள சினிமா நடிகையான நிரஞ்சனி சண்முகராஜாவுக்கு 'விஸ்வாபிமாணி கலா கீர்த்தி' பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் இலங்கையில் வெளியிடப்பட்ட சுனாமி திரைப்படத்துக்காக சர்வதேச விருதையும் வென்றவர்.

இலங்கை அரசால் தமிழ் திரைக் கலைஞர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட கௌரவம், ஒட்டுமொத்த தமிழ் கலைஞர்களுக்குமான அங்கீகாரத்தின் முன்னோடியாகப் பார்க்கப்படுகின்றது என்று துறைசார்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4-இ)

## ஒமிக்ரோனுக்கு 8 அறிகுறிகள்!

கொழும்பு,டிசெ.29

ஒமிக்ரோன் வைரஸ் பிறழ்வு ஏற்பட்டவர்களுக்கு, முக்கிய எட்டு நோய் அறிகுறிகள் தென்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டை வலி, மூக்கு ஒழுகுதல், சோர்வு, தும்மல், கீழ் முதுகுவலி, தலைவலி, இரவில் வியர்த்தல் மற்றும் தசைவலி ஆகியவை முக்கிய அறிகுறிகளாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகின் பல பகுதிகளில் வேகமாகப் பரவி வரும் இந்த வைரஸ், அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் முன்னணியில் உள்ளது.

இந்த வைரஸில் இருந்து பாதுகாப்புப் பெற பூஸ்டர் டோஸ் மற்றும் கடுமையான சுகாதார நடைமுறைகளைக் கடைபிடிப்பது அவசியம் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-4-இ)

## வாகன உதிரிப்பாக தொழிற்சாலையில் தீ

கொழும்பு,டிசெ.29

பிலியந்தலை, தொலே மயானப்பகுதியிலுள்ள வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தி நிலையத்தில் தீப்பரவல் ஏற்பட்டது. 3 தீயணைப்பு வாகனங் களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

சம்பவத்தால் எந்தவித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. தீயால் பெருமளவிலான வாகனப் பாகங்கள் மற்றும் தளபாடங்கள் எரிந்து நாசமாகியுள்ளன. மேல்தளம் முழுமையாகத் தீக்கிரையாகி யுள்ளது.

மின்கசிவு காரணமாக இந்தத் தீவிபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4-இ)

## திருட்டுக் கூட்டணிகளால் நாடு அபிவிருத்தியடையாது

### ரில்வின் கொதிப்பு



கொழும்பு,டிசெ.29

தேர்தல் காலங்களில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக திருட்டுக் கூட்டணிகளை அமைத்தவர்களால், நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்த வருடத்தில் நாட்டு மக்களுக்கு உண்பதற்கு உணவு கூட கிடைக்காத நிலையொன்று ஏற்படும். இதனைத் தடுப்பதற்கு அரசிடம் எந்தவிதமான திட்டங்களும் இல்லை. அடுத்த வருடம் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு கண்டிப்பாகவரும். இதனால் மின்சாரத் தடையும் ஏற்படும். இதற்கு முன்னர் நாட்டை ஆட்சி செய்தவர்கள், ஆட்சியதிகாரத்தில் உயர் பதவிகளை வகித்தவர்களுடன் ஒன்றாக இணைந்து நாட்டை கட்டியெழுப்ப முடியாது-என்றார். (ஒ-4-இ)

## 3 தூதரகங்களுக்கு இவ்வாரம் பூட்டு

கொழும்பு,டிசெ.29

நைஜீரியாவின் அபுஜாவிலுள்ள தூதரகம், ஜேர்மனியின் பிராங்போர்ட்டிலுள்ள தூதரகம் மற்றும் சைப்ரஸின் நிக்கோசியாவிலுள்ள தூதரகம் ஆகியவற்றை எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தற்காலிகமாக மூடுவதற்கு வெளிநாட்டு அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் வெளிநாட்டு அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட மூன்று தூதரகங்கள் மூடப்பட்டவுடன், இருதரப்பு அரசியல், பொருளாதாரம், கலாசார உறவுகள் மற்றும் தூதரக செயற்பாடுகளைப் பராமரித்தல் உள்ளிட்ட அவற்றின் செயற்பாடுகள் அங்கீகாரம் பெற்ற தூதரகங்களால் மேற்கொள்ளப்படும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்ப்பாணம் அளவெட்டி தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளி விழாவும் பரிச ளிப்பு நிகழ்வும் கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. (ய-63)




மன்னாரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு மன்னார் லயன்ஸ் கழகத்தால் அண்மையில் உதவிகள் வழங்கப்பட்டன. (ய-60)

வவுனியா, சேமமடு சண்முகானந்தா மகாவித்தியாலயத்தில், பழைய மாணவர் சங்க உறுப்பினர் எஸ். தனஞ்சயனின் நிதிப்பங்களிப்பில், சரஸ்வதி சிலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதனை வவுனியா நகரசபை உறுப்பினர் க.சந்திரகுல சிங்கம் கடந்த 23 ஆம் திகதி திறந்து வைத்தார். (ய-110)






வரணிப் பிரதேச பாடசாலை களில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 16 மாணவர்க ளுக்கு லண்டனில் இயங்கும் வரணிப் பிரதேச ஒன்றியத் தால் வழங்கப்பட்ட நிதியுதவி யில் மடிக்கணினிகள் அண்மை யில் வழங்கப்பட்டன. (ய-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்காலில்

# ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர்



## விக்னேஸ்வரன் மீண்டும் அழுத்தம்திருத்தம்

தெரண ஊடகத்தில் நாடாளுமன்ற உறுப்பினரான க.வி.விக்னேஸ்வரனின் நேர்காணல் தொடர்பில் நதீக தர்ஷண வேரதூவ என்பவரின் ஒக்ரோபர் மாதம் 22ஆம் திகதிய முறைப்பாட்டுக்கு பதில் அளிக்கும் விதமாக கொழும்பு குற்றவியல் பிரிவு பொலிஸ் பரிசோதகர் ப்ரேமவர்தனவுக்கு தான் வழங்கிய வாக்குமூலத்தை நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ஊடக அறிக்கையாக அனுப்பிவைத்துள்ளார். அதன் முழு வடிவமும் இங்கே பிரசுரமாகின்றது.

எனக்கு வயது 83. நான் 2020ஆம் ஆண்டில் ஓகஸ்ட் மாதத்தில் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். நான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தான் குறிப்பிட்ட செவ்வி நடைபெற்றது. தெரண ஊடகத்தின் 'மொகத உணே' என்ற நிகழ்ச்சிக்கு என்னிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. செவ்வியானது என் கொழும்பு வீட்டில் நடைபெற்றது.

குறித்த கேள்வி- பதில் நிகழ்வு ஒரு மணித்தியாலத்துக்கு அதிகப்படியான நேரத்துக்கு நடைபெற்றது. ஆனால் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சி 10, 12 நிமிடங்களுக்கே தணிக்கை செய்து ஒளிபரப்பப்பட்டது. ஆகவே ஒரு மணித்தியாலத்துக்கு மேல் என்னிடம் கேள்விகேட்டு பதிவுசெய்த பின் தமக்குத் தேவையான பகுதிகளையே ஒளிபரப்பினார்கள். இரண்டு பதிவுகளையும் பார்த்த பின்னரே என்னால் செவ்விகள் பற்றிக் கருத்து வெளியிடமுடியும்.

ஆனால் தாமதிக்காமல் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிப்பேன். அவையாவன

**1. தமிழ் மொழியே இலங்கையின் ஆதிமொழி என்றது?**

***என் கருத்து*** - இலங்கையின் ஆதிக்குடிகள் பேசிய மொழி தமிழ் மொழியே. சிங்கள மொழியானது அண்மைய மொழியொன்று. கி.பி. 6ஆம் 7ஆம் நூற்றாண்டுகளில்த் தான் குறித்த மொழி பாவிப்புக்கு வந்தது. இது ஒரு சரித்திர ரீதியான உண்மை. எனது பொது இளமாணிப் பரீட்சைக்கு நான் வரலாறை ஒருபாடமாக எடுத்திருந்தேன். அரசியல் யாப்பின் 14ஆவது உறுப்புரையின்படி இவ்வாறான எனது கருத்தை வெளிப்படுத்த எனக்கு உரிமையுண்டு.

**2. நான் மகாவம்சத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது?**

***என் கருத்து*** -மகாவம்சத்தை இல்லை என்று எவரும் கூற முடியாது. ஆனால் அந்த நூல் பௌத்த மதத்தைப் பெருமைப்படுத்துவதற்காக எழுதப்பட்ட கட்டுக்கதை. இதனை அதன் ஆசிரியரே ஒவ்வொரு செய்யுளின் அந்தத்திலும் குறிப்பிட்டுள்ளார். அது ஒரு கட்டுக்கதை என்பதால் அதன் பொருளடக்கத்தை வரலாற்றுரீதியான சான்றுகள் என்று கொள்ளமுடியாது.

அந்த நூல் பாளி மொழியில் பௌத்த மதத்தைப் பெருமைப்படுத்த எழுதப்பட்ட ஒரு கட்டுக்கதையே என்பது தான் என்னுடைய தற்போதைய கருத்துமாகும். அரசியல் யாப்பின் உறுப்புரை 14இன் கீழ் இவ்வாறான எனது கருத்தை வெளியிட எனக்குக் கருத்துச் சுதந்திரம் உண்டு.

**3. எல்.ரி.ரி.ஈ. என்பது ஒரு பயங்கரவாத இயக்கமல்ல. இலங்கை அரசே அவர்களை ஆயுதமேந்த வைத்தது என்பது?**

***என் கருத்து*** - தமிழீழ விடுதலைப்புலிகள் என்பவர்கள் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தமிழர்களின் விடுதலைக்காகப் போராடிய தமிழ் இளைஞர்களின் ஒரு விடுதலை இயக்கத்தினர் ஆவர். பிரிட்டிஷாரை எதிர்த்து இந்திய சுதந்திரத்துக்காகப் போராடிய சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் சேனை அணியைப் போன்றவர்கள். பின்வரும் நிகழ்வுகள் நிகழ்ந்திருக்காவிட்டால் அரச படைகளை எதிர்க்க எமது இளைஞர்கள் ஆயுதமேந்தியிருக்கமாட்டார்கள்.

1. திட்டமிட்டு தமிழ் மக்களின் பூர்வீக இடங்களில் வடக்கு கிழக்குக்கு அப்பால் வெளியிடங்களில் இருந்து மக்களைக் கொண்டு வந்து குடியேற்றியிருக்காவிட்டால்,
2. 'சிங்களம் மட்டும்' சட்டத்தை இயற்றியிருக்காவிட்டால்,
3. உயர் கல்வியில் சமநிலைப்படுத்தல் என்ற ஒரு கொள்கையைப் புகுத்தியிருக்காவிட்டால்,

1958ஆம் ஆண்டில், 1983ஆம் ஆண்டில் மேலும் வேறு காலகட்டங்களில் வெறித்தனமான கலகங்களை தமிழர்களுக்கு எதிராக ஏற்படுத்தி குழந்தைகள், இளைஞர்கள், வயோதிபர் என்று பார்க்காது முரட்டுத்தனமாக அவர்களைக் கொன்று குவித்ததுமல்லாமல் பெண்களை வன்புணர்ச்சிக்கு உட்படுத்தாது இருந்திருந்தால்,

4. யாழ். நூலகத்தை எரிக்காது இருந்திருந்தால்,
5. வடக்கு -கிழக்கை இராணுவ மயமாக்காது இருந்திருந்தால்,
6. ஆயுதமேந்தியவர்களில் சிலர் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கும் பொறியியல்பீடத்துக்கும் பரீட்சைகளில் தேர்வானவர்கள்.

பல்வேறு இலங்கை அரசாங்கங்கள் பல தடவைகள் விடுதலைப்புலிகளுடன் உத்தியோகபூர்வ பேச்சை நடத்தியிருந்தன. இலங்கை அரசாங்கங்கள் விடுதலைப்புலி களை கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு இடங்களுக்குப் போக விட்டுத் தங்கியிருக்க அனுமதித்தனர். 2002ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை அரசாங்கம் நீக்கியது.

1980ஆம் ஆண்டின் இறுதி ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள் கையளித்ததாக நான் பத்திரிகைகளில் வாசித்திருந்தேன். ஆகவே காலத்துக்குக் காலம் தமது நன்மைக்காக இலங்கை அரசாங்கங்கள் விடுதலைப்புலிகளின் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாக அடையாளப்படுத்திவிட்டு தமக்கு நன்மைபெற வேறு தருணங்களில் குறித்த அடையாளத்தைக் கைவிட்டு வந்துள்ளனர். இதுவே குறுகிய, நெடிய நினைவு மட்டங்களில் மக்கள் மனதில் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளது.

இலங்கை அரசாங்கங்கள் 'பயங்கரவாதி' என்ற சொல்லை தமது கருத்துக்களுக்கு முரணானவர்களை அழைக்கும் ஒரு பதமாகப் பாவித்து வருகின்றார்கள். இலங்கை அரசு தான் ஒருவரைப் பயங்கரவாதி என்றும் சாமானியர் என்றும் பாகுபடுத்துகின்றது. தமது சுயநிர்ணய உரித்தை ஒருவர் வலியுறுத்துவது அரசாங்கத்துக்குப் பிடிக்கவில்லை என்றால் உடனே அவரைப் பயங்கரவாதி என்று அடையாளம் காட்டுவார்கள். ஒருவரின் மதம் சம்பந்தமாக அரசாங்கத்தினர் வெறுப்பு கொண்டால் உடனே அந்த மத அலகின் உறுப்பினர்களைப் பயங்கரவாதிகள் என்று பச்சை குத்திவிடுவார்கள். கெப்பெட்டிபொல திசாவை என்பவர் பிரித்தானியர்களால் பயங்கரவாதி, பயங்கர குற்றவாளி என்று அடையாளப்படுத்தப்பட்டார். ஆனால், எம் நாட்டு மக்களால் விடுதலைவீரர் என்றும் தீரன் என்றும் அழைக்கப்பட்டு போற்றப்பட்டார். தொடர்ந்து வந்த இலங்கை அரசாங்கங்களின் இரக்கமற்ற, குரூரமான நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடிய விடுதலை வீரர்களே விடுதலைப்புலிகள். உண்மையில் பயங்கரவாதிகள் என்ற பதம் இலங்கை அரச படையினருக்கே பொருந்தும்;.

பெரும்பான்மையான வடக்கு- கிழக்குத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று அடையாளப்படுத்தமாட்டார்கள். அரசாங்கங்களும் ஒரு சில சிங்கள மக்களுந்தான் அவர்களை அவ்வாறு அடையாளம் காட்டுவார்கள். இலங்கை அரசியல் யாப்பின் உறுப்புரை 14இன் கீழ் மேற்படி எனது கருத்துக்களை வெளியிட எனக்குப் பூரண உரித்துண்டு.

**4. முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்துக்கும் மேலான பொது மக்கள் அரச படையினரால் கொல்லப்பட்டார்கள் என்பது?**

***என் கருத்து*** - இது உண்மை. பாதுகாப்புப் பிரதேசங்கள் என்று அரசின் முகவர்களால் அடையாளப்படுத்தப்பட்டு பொதுமக்கள் அங்கு ஆற்றுப்படுத்தப்பட்டு அவர்கள் மீது குண்டுகள் போடப்பட்டன. மக்களுக்குச் சென்றடைய வேண்டிய உணவு, மருந்துவகைகள் என்பன வெகுவாகக் குறைக்கப்பட்டு பலர் பட்டினியாலும் நோய்களாலும் செத்துமடிய இடமளிக்கப்பட்டது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்பதற்கு சான்றுகள் பல உள்ளன.

2011ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்கி மூனின் நிபுணர்கள் குழு சுமார் 40 ஆயிரம் பொது மக்களாவது மடிந்தார்கள் என்றது. 2012ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் உள்ளக அறிக்கைகள் 70 ஆயிரம் பொதுமக்களாவது மடிந்தனர் என்றன. ஒரு சர்வதேச விசாரணையே உண்மையை முழுமையாக வெளிக்கொண்டு வரமுடியும். எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தினுள் நுழைந்தவர்கள் தொகையையும் அங்கு முன்னர் வாசஞ் செய்த மக்களின் தொகையையும் கூட்டி அதில் இருந்து தப்பியவர்களின் தொகையைக் கழித்தால் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான ஒரு தொகையையே அது வெளியிடும்.

அரசமைப்பின் உறுப்புரை 14இன் கீழ் எனது கருத்துரிமை அடிப்படையில் இந்தக் கருத்துக்களை வெளியிட எனக்கு உரிமை உண்டு.

**5. படையினர் பொது மக்களைக் கேடயமாகப் பாவித்தார்கள் என்பது?**

***என் கருத்து*** - அவ்வாறு கூறியதாக எனக்கு ஞாபகமில்லை. செவ்வி பற்றிய காணொலியைப் பார்த்தால்த்தான் நான் இதற்குப் பதில் அளிக்கமுடியும்.

**6. பலாத்காரமாக புத்தர் சிலைகள் வடக்கில் அமர்த்தப்படுகின்றன என்பது?**

***என் கருத்து*** - இது ஓர் உண்மை. சிலருக்கு எதிராக வழக்குகளும் பதியப்பட்டுள்ளன. நான் முதலமைச்சராக இருந்த போது இவ்வாறான வழக்குகள் பற்றி எனக்குத் தெரியவந்தன. முழு விவரங்களையும் உரிய அலுவலர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

இது பற்றிய எனது கருத்தை வெளியிட அரசியல் யாப்பின் உறுப்புரை 14இன் கீழ் எனக்குரித்துண்டு.

**7. பௌத்த சின்னங்களை அமர்த்துவது தமிழ் மக்களை அடிமைப்படுத்தவே என்பது**

***என் கருத்து*** -அரசாங்கத்தினாலும் அதன் முகவர்களாலும் வடக்கு-கிழக்கில் காணிகள் கைப்பற்றப்பட்டு வருவது என்பது ஓர் உண்மை. இதன் நோக்கம் வடக்கு - கிழக்கின் மக்கள் தொகையில் மாற்றம் ஏற்படுத்துவதே. பௌத்த சிலை அமைத்தல் இந்த நோக்க நடவடிக்கைகளுள் அடங்கும்.

எனக்கெதிரான குற்றச்சாட்டில் நான் கூறிய கருத்துக்கள் பின்வரும் சட்டங்களுக்கு முரணான விதத்தில் அமைந்துள்ளன என்று கூறப்பட்டுள்ளது. அவையாவன

1. ICCPR என்ற ஆவணத்தின் பிரிவு 3(1)
2. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரிவு 2 (1) (h)
3. இலங்கைத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 120
4. இலங்கைத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 290 (b) ஆகியன.

எனது கூற்றுக்களுக்கும் குறிப்பிட்ட இந்தப் பிரிவுகளின் உள்ளடக்கங்களுக்கும் இடையில் எந்தவிதத் தொடர்பும் இல்லை. ஆகவே எனக்கெதிரான குற்றச்சாட்டுக்களை நான் மறுக்கின்றேன்.


இறுதியாக இலங்கைத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 120க்கு தரப்பட்டிருக்கும் விளக்கத்தை இங்கு தருகின்றேன்.

'பின்வருவன இந்தச் சட்டத்தின் கீழ் குற்றங்கள் ஆகா

1. குடியரசின் ஜனாதிபதியோ அரசாங்கமோ பிழையாக வழிநடத்தப்பட்டுள்ளார்கள் என்றோ தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்றோ எடுத்துக்காட்டும் வாசகங்கள்.
2. அரசாங்கத்தின் அல்லது அரசின் ஏதாவது ஓர் அலகின் பிழைகளையோ தவறுகளையோ சுட்டிக்காட்டுவது.
3. நீதி நிர்வாகத்தில் குறித்த தவறுகளை அல்லது பிழைகளைத் திருத்தக் கூறப்படும் வாசகங்கள்.
4. இலங்கைக் குடிமக்களை உணர்ச்சிக்கு உள்ளாக்கி சட்ட முறையாக நிறுவப்பட்ட ஏதேனும் ஒன்றை சட்டப்படி மாற்ற முனைவது
5. இலங்கை மக்களிடையே வெறுப்பையும் பகையையும் ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் ஒன்றை நீக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுவது.

இறுதியாக ஒன்றைக் கூற விரும்புகின்றேன். இந்தக் குற்றச்சாட்டுகளும் அதன் வழி வந்த விசாரணைகளும் அரசாங்கமும் பெரும்பான்மைச் சமூகமும் எவ்வாறு சிறுபான்மையினர், அரசியல் அமைப்பின் உறுப்புரை 14இன் கீழ் அவர்களுக்கு இருக்கும் தமது கருத்துச் சுதந்திரத்தை வெளிப்படுத்த பலாத்காரமாகவும் பயங்கரவாத முறையிலும் இடமளியாது இருந்து வருகின்றார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பெண் சாமியார் நிகழ்ச்சிக்குத் தடை

சென்னை, டிசெ.29

செங்கல்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற விருந்த பெண் சாமியார் அன்னபூரணியின் அருள்வாக்கு நிகழ்ச்சிக்கு செங்கல்பட்டுப் பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

கடந்த 2 நாள்களாக சமூக வலைத்தளங்களில் 'ட்ரெண்டிங்' ஆகி பேசப்பட்டு வருகிறார் 'அன்னபூரணி அம்மாள்' என்ற பெயரில் அழைக்கப்படும் பெண் சாமியார்.

இவர் தன்னை ஆதிபராசக்தியின் அடுத்த உருவம் எனக் கூறி வருவதுடன், அவ்வபோது பக்தர்களுக்குப் பரவசத்தையும் ஏற்படுத்தி வருகிறார்.

தனது வலது கையைக் காட்டியபடியே பக்தர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருக்கும் பெண் சாமியாரின் காலில் விழுந்து பெண்கள், ஆண்கள், குழந்தைகள் என அனைவருமே வழிபடுகிறார்கள்.

இந்தக் காணொலிகள் தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகின்றன.

இந்த நிலையில் செங்கல்பட்டிலுள்ள தனியார் திருமண மண்டபம் ஒன்றில் அருள்வாக்குக் கூறப்போகிறார் எனவும் அதற்குப் பக்தர்கள் முன்பதிவு செய்யலாம் என்றும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன.

இதையடுத்து பெண் சாமியார் நிகழ்ச்சிக்கு பொலிஸார் தடை விதித்ததுடன் மண்டபங்களில் நடத்த அனுமதிக்கக்கூடாது எனவும் மண்டப உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும் இவர் சொல்வதெல்லாம் உண்மை தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கடந்த 2014 ஆம் ஆண்டில் பங்கேற்ற காணொலி தற்போது வெளியாகிய நிலையில் பக்தர்கள் அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# மேலும் 2 தடுப்பூசிகளுக்கு இந்தியாவில் அனுமதி

புதுடில்லி, டிசெ.29

இந்தியாவில் மேலும் 2 கொரோனாத் தடுப்பூசிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. அதன்படி 'கோர்பிவேக்ஸ்' மற்றும் 'கோவோவேக்ஸ்' ஆகிய இரு கொரோனாத் தடுப்பூசிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்தியாவில் கோவிஷில்ட், கோவேக்ஸின் மற்றும் ஸ்புட்னிக்-வி ஆகிய தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

தருபவர்: வித்யாதரன்





# ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள்




கடந்த ஆண்டில், அஷ்டமத்துச் சனி, அஷ்டம குரு என்று படாத பாடுபட்டு எப்போது இதிலிருந்து விடுதலை கிடைக்கும் என ஏங்கியிருந்த மிதுன ராசி அன்பர்களே...! கடந்த நவம்பர் மாதம் நிகழ்ந்த குருப்பெயர்ச்சி தங்களுக்கு சாதகமாகி குருவின் பார்வையைப்பெற்று அஷ்டமத்துச்சனியின் தாக்கத்திலிருந்து தற்போது தான் கொஞ்சம் இளைப்பாறியிருக்கிறீர்கள். இந்த நிலையில் பிறக்கும் இந்தப் புத்தாண்டு உங்களுக்கு மிகவும் சாதகமான பலன்களைத் தரப்போகிறது.

இந்தப் புத்தாண்டு உங்கள் ராசிக்கு 6ஆம் இடத்தில் பிறப்பதால் மனதில் இருந்த மனக்கவலைகள், பயம் தடுமாற்றம் ஆகியன நீங்கும். நம்பிக்கையோடு செயற்படத் தொடங்குவீர்கள். வீட்டிலும் வெளியிடங்களிலும் உங்கள் சொல்லுக்கு மதிப்பு பிறக்கும்.

சுக்கிரபகவான் உங்களுக்கு சாதகமான ராசிகளில் சஞ்சரிப்பதால் இல்லத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். உறவினர்கள் தேடிவந்து அன்பைப் பொழிவார்கள். உங்கள் ராசி அதிபதியான புதபகவான் மறைவு ஸ்தானமான எட்டாம் வீட்டில் சஞ்சரிக்கும் காலத்தில் இந்தப் புதுவருடம் பிறப்பதால் மிகுந்த நற்பலன்கள் உண்டாகும். செல்வாக்கு அதிகரிக்கும்.

செவ்வாய் பகவான், இந்த ஆண்டு பிறக்கும் போது ஆறாம் வீட்டில் சஞ்சரிப்பதால் உங்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றியாகும். தடைகள் நீங்கும். பல முக்கியமான வேலைகளை முடிப்பீர்கள். நிலம் தொடர்பான சர்ச்சைகள் நீங்கும்.

குருபகவான் 13.4.2022 வரை உங்கள் ராசிக்கு ஒன்பதாம் வீட்டில் அமர்ந்து பலன் தருகிறார். இதனால் பணவரவு அதிகரிக்கும். கடன்களை அடைப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகளும் பணவரவும் உண்டாகும். குடும்பத்தினரின் ஆரோக்கியம் சீராகும். உறவினர்கள் வீட்டு சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

14.4.2022 முதல் உங்கள் ராசிக்குப் பத்தாம் வீட்டில் குருபகவான் சஞ்சரிக்க இருப்பதால் அதிக பொறுப்புடன் நடந்துகொள்வது நல்லது. முன்யோசனை அவசியம். அலுவலக வட்டாரங்களில் யாரையும் விமர்சனம் செய்யவேண்டாம். ஆடம்பரம், பெருமை ஆகியவற்றுக்காகச் செலவு செய்வதைக் கட்டுப்படுத்துங்கள்.

சனிபகவான் எட்டாம் இடத்திலேயே தொடர்வதால் அனைத்திலும் அதிக எச்சரிக்கை அவசியம். தேவையற்ற சிக்கல்கள், பிரச்சினைகள், பிரிவுகள் ஏற்படலாம் என்பதால் கவனம் அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.

ராகு பகவான் இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்கள் உங்கள் ராசிக்குப் பன்னிரண்டாம் வீட்டிலேயே சஞ்சரிக்கிறார் என்பதால் அனைத்திலும் ஒரு மறைமுக இலாபம் இருக்கும். என்றாலும் மனதில் எதிர்மறை எண்ணங்கள் தோன்றிய வண்ணம் இருக்கும்.

கேதுபகவான் ஆறாம் வீட்டில் அமர்ந்திருப்பதால் சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றிபெறுவீர்கள். பெரிய பதவிகள் தேடிவரும். புதிய பெரிய வீட்டுக்குக் குடிபோவீர்கள்.

ஆனால் 21.3.2022 முதல் உங்கள் ராசிக்கு 11ஆம் வீட்டில் ராகுவும், 5இல் கேதுவும் நுழைவதால் கொஞ்சம் அலைச்சல் இருந்தாலும் பல நற்பலன்கள் உண்டாகும்.

தொழிலில் இருந்த மந்தநிலை நீங்கும். அலுவலகத்தில் கவனமாக இருக்க வேண்டிய காலம் இது. தேவையற்ற பேச்சைத் தவிர்க்கலாம். எவ்வளவு உழைத்தாலும் நற்பெயர் கிடைக்கவில்லையே என்ற எண்ணம் மனதில் தோன்றும்.

மொத்தத்தில் இந்த 2022ஆம் ஆண்டு உங்களைத் திட்டப்படுத்தி நல்ல முடிவுகளை நோக்கி நகர்த்தும். பணவரவில் இருந்த தடைகள் நீங்கிப் பணப்புழக்கம் அதிகமாகும்.

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** சேமிப்பு உயரும். பணிச்சுமை கூடும். குடும்ப நிம்மதி மீளும். திடீர் லாபம் வரும். சமீபத்திய கவலைகள் ஒரு வழியாக நீங்கும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து நிம்மதி பெறுவீர்கள்.

**இடபம்:** சக பணியாளர்களின் அனுசரிப்பு காரணமாக வெல்வீர்கள். நண்பருக்கு உதவி செய்யப்போய் சங்கடத்தில் மாட்ட வேண்டாம். நல்லவரின் உபதேசத்தைப் புறக்கணிக்காமல் ஏற்பீர்கள்.

**மிதுனம்:** பேச்சில் உங்களின் அனுபவ அறிவு வெளிப்படும். நல்லவர்களிடம் இருந்து உதவி கிடைக்கும். பணியாளர்களுக்குஏற்பட்ட அதிருப்திகள் அனைத்தும் சரியாகும்.

**கடகம்:** அலுவலகத்தில் முக்கிய பொருள்களைக் கவனமாகக் கையாளுங்கள். ஜீரணம் சம்பந்தமான சிறு சிறு பிரச்சினைகள் வந்து சரியாகும். கலைத்துறையில் ஈடுபாடு ஏற்படும். உழைப்பு அதிகரிக்கும்.

**சிம்மம்:** வெளியூரில் இருந்து மனம் இனிக்கும் செய்திகள் வந்து சேரும். வாழ்க்கைத்துணையின் மூலம் நன்மை ஒன்று நிகழும். பிறருக்கு உதவிகரமாய் நடந்து கொண்டு செல்வாக்கு அடைவீர்கள்.

**கன்னி:** புதிய துறையில் ஆர்வம் ஏற்பட்டு அதில் பயிற்சி பெறுவீர்கள். அலுவலகப் பணத்தைக் கையாளும் போது நேர்மையாக இருங்கள். நீங்கள் எதிர்பார்த்திருந்த புதிய செய்தி தாமதமாக வரும்.

**துலாம்:** சுற்றியுள்ளோரின் அன்பும் ஆதரவும் உங்களுக்குக் கிடைக்கும். நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். மனதில் மகிழ்ச்சி பெருகும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** பணவிடயத்தில் இருந்து வந்த தடைகள் இன்று அகலும். சிறு சிறு தேவைகள் உடனுக்குடன் நிறைவேறி மகிழ்ச்சி தரும். திட்டமிட்ட பயணம் சற்றுத் தள்ளிப்போனாலும் மகிழ்ச்சியான நாள்.

**தனுசு:** வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படுவதை தவிர்க்கலாம். மகிழ்ச்சியும் சிரமமும் கலந்த பலன்களாக இன்று இருக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சுறுசுறுப்பு கூடும்.

**மகரம்:** தாயாருக்கு உடல் உஷ்ணத்தால் ஏற்பட்ட சிரமம் நீங்கும். மகிழ்ச்சி இரட்டிப்பாகும். பணியில் ஆர்வம் அதிகரிக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**கும்பம்:** முன்பு இருந்த சிரமம் தீரும். நண்பர்கள் உயர்நிலை அடைவர். நேற்றைய கவலைகள் முழுக்கத் தீர்ந்து இன்று நிம்மதி பிறக்கும். பொது விடயங்களைப் பொறுப்புடன் நடத்தி மகிழ்வீர்கள்.

**மீனம்:** வீண் பழி வரக்கூடிய செயல்களில் இறங்க வேண்டாம். தேவையற்ற சச்சரவுகளில் ஈடுபடாதிருந்தால் இனிய நாள். கலகலப்பான நாள். நண்பர், உறவினரின் சந்திப்பு நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏசியன் தளபாட நிலையத்தின் புதிய கிளை திறப்பு விழாவை முன்னிட்டு**

**நத்தார் பண்டிகை மாபெரும் விலைக்கழிவு**

**Electronic & Furniture**

**washing machine (innovex) 5year warranty**

| | | | |
|---|---|---|---|
| Fully Automatic | (6 kg) | ~~53250~~/- | 40200/- |
| | (7 kg) | ~~61560~~/- | 45100/- |
| Semi Automatic | (6.5 kg) | ~~37560~~/- | 29500/- |



**Fridge (innovex) 10 year warranty**

| | | | |
|---|---|---|---|
| Single Door | 180 Ltr | ~~61960~~/- | 44990/- |
| Double Door | 180 Ltr | ~~65960~~/- | 48150/- |
| | 240 Ltr | ~~70960~~/- | 52100/- |
| | 250 Ltr | ~~85060~~/- | 63900/- |
| Inverter | 250 Ltr | ~~92960~~/- | 69450/- |



**Television (innovex) 3 year warranty**

| | | |
|---|---|---|
| 32 ``LED TV | ~~45960~~/- | 36150/- |
| 40" LED TV | ~~79960~~/- | 62950/- |



**Piyestra**

Matters (Piyestra)

| | | |
|---|---|---|
| Single (D/L) 6 x 3 | ~~5400~~/- | 3850/- |
| Double (D/L) 6 x 4 | ~~7050~~/- | 4970/- |



**Plastic Verandah Chair (Piyestra)**
(6 Chair + Teapow) ~~10160~~/- 8100/-



**Sofa3 + 1 + 1 (warranty Rexin - 2years Body - 10 Years** ~~60660~~ 49000/-

Piyestra sofa's and Office Furnitures 15% Discount
Piyestra Bedroom Suits 12.5% Discount

INNOVEX Piyestra Nilkamal Panasonic Hisense DAXER

114, Navalar Road, Jaffna. 021 222 6898


வருட இறுதியை முன்னிட்டு

## யாழ்.காணி மாவட்ட பதிவக கடமைகள் இடைநிறுத்தல்

யாழ்ப்பாணம் காணி மாவட்டப் பதிவகத்தின் கருமபீட கடமைகள் வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு இரு தினங்கள் இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாளை 30ஆம் திகதி மற்றும் நாளை மறுதினம் 31ஆம் திகதி ஆகிய தினங்கள் இடம்பெற மாட்டாது. எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதி திங்கட்கிழமை அனைத்துச் சேவைகளும் வழமைபோல் இடம்பெறும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)


## வலி கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி (வ.து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்படிவங்களை சங்க வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10 ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர் வலி-கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி பருத்தித்துறை வீதி ஆவரங்கால் புத்தூர் என்ற முகவரிக்கு 12.01.2022 ந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும்.

**பதவிப் பெயர் :- விற்பனை உதவியாளர்**

| பதவி விபரம் | சம்பளக் குறியீட்டு இல. | வெற்றிடம் |
|---|---|---|
| 01. விற்பனை உதவியாளர் | 308/17 | 10 |

பதவி குறியீட்டு இலக்கம் :- 308/15 (கூ.வே.ஆணைக்குழு சு.நிஇ108/81இன்படி)
சம்பளக் குறியீட்டு இலக்கம் :- 308/17 (கூ.வே.ஆணைக்குழு சு.நிஇ 04/2018இன்படி
சம்பள அளவுத்திட்டம் :- 14725-17175 (சுற்று நிருப இல 04/2018 இன்படி)
115x10-130x10)

(இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் இதரபடிகளும் வழங்கப்படும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள் :**

(அ) கூட்டுறவுப் பணியாளர் சாதரண தரம் சான்றிதழ்
அல்லது
ஆ) 8ம் வகுப்பிலான சித்தியும் விற்பனை அலுவலகளுடன் தொர்புடையதாக மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**பொது நிபந்தனைகள்**


1. வயது 18.01.2022 ந் திகதி 18 வயதிற்கு குறையாதவர்களாயும் 45 வயதிற்கு மேறபட்டாத வர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. கல்வித்தகமைகள். அனுபவம். வயது. வதிவிடத்தை உறுதிப்படுத்துதல் நற்சான்றிதழ். தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. நியமனத்தின் போது சுற்றுநிருபத்திற்கமைவாக ரொக்கப்பிணை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.
4. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்த்தினுடாக விண்ணப்பிக்க வேண்டும்.
5. சங்கப்பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

தலைவர் 29.12.2021

(CR 83561) 1-6


# மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 07 . 1951



மறைவு
27 . 12 . 2021

## செல்லத்துரை சுந்தரராசா (சுந்தரம்)

மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும் சரசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுந்தரராசா (சுந்தரம்) அவர்கள் நேற்று (27.12.2021) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும், கதிரவேலு இரத்தினதேவியின் அன்பு மருமகனும், தேன்மதியின் பாசமிகு கணவரும், சுவேந்திரன் (பிரான்ஸ்), சுதர்சன், சுரேஸ், துவாரகா, சுபிராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷாந்தினி, வனிதா, சிந்துஜா, நிஷாந்த், பவித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்சியன், சஜித்தன், திரிஷ், ஜதுஸ்மிகா, சாகிஷா, அவற்சரா, அவற்சரன், அக்ஷன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சுந்தரராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு: 077 3614 683
077 3206 150

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 8369)

# மரண அறிவித்தல்



## அருட்சகோதரி மேரி ஆன் மனுவல்

(திருக்குடும்ப கன்னியர் சபை)

யாழ் நாரந்தனையை பிறப்பிடமாகவும், திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்தவருமான, அருட்சகோதரி மேரி ஆன் மனுவல் நேற்று (28.12.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பஸ்ரியாம்பிள்ளை மனுவல் அல்பிறட்அம்மா புஸ்பம் தம்பதியரின் புதல்வியும், எட்வேட் தேவதாசன் (ஓய்வுபெற்ற பதில் உதவி அரசாங்க அதிபர்- வவுணதீவு) மாறிஸ்ரெலா மற்றும் காலஞ்சென்ற ஞானேந்திரன் சேவியர் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யாழ் புனித மரியாள் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான மேரி கிறேஸ், அருளம்மா திரேஸ், ஸ்ரீபன் (ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்) மற்றும் றோஸ்மேரியின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிப் பயண திருப்பலி இன்று (29.12.2021) புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நல்உடல் இளவாலை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.130, நாலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
வாணன் - 076 140 5169

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1260) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கந்தையா நவரட்ணம்

கண்டாவளை சந்தையடியை பிறப்பிடமாகவும், ஜேர்மனி Heilbronn ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நவரட்ணம் அவர்கள் 23-12-2021 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், கந்தையா, சிதம்பரம் (குஞ்சம்மா) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாவதி(வதி) அவர்களின் பாசமிகு கணவரும், பிரதீனா, அருண் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீபன் அவர்களின் அன்பு மாமனாரும், காசினி அவர்களின் அன்புப் பேரனும், தங்கமணி, கமலமணி, விக்கினேஸ்வரி (சிவா- இத்தாலி), சந்திரகுமார்(குமார்- சுவிஸ்), விஜயகுமார்(பாஸ்கரன் - அவுஸ்திரேலியா), சிவகுமார்(பிரபா - கனடா), ஈஸ்வரி(ஈசு - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராசா, வேலாயுதபிள்ளை, இராமலிங்கம், சுந்தரலட்சுமி, சுவேஸ்னி, பகீரதி, உதயகுமார், கமலாதேவி, கமலநாதன், கமலரதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், றஜனி, சதீசன், குணதீசன், நிமலதீசன், பிரதீசன், முரளீசன், சுபிதா, நயனீசன், இலக்ஷன், இலக்ஷிகா, திவானிக்கா, காருணியா, தர்சிகா, மதுசூதனன், கவிதா ஆகியோரின் அன்பு மாமாவும், சாருஜன், சாரங்கி, விதுஸ், விதுஷிகா, விதுஜா, பர்னிதா, தரணியா, சிவரூபன், மதுமிதா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் ஜேர்மனியில் 28.12.2021 செவ்வாய்க்கிழமை இலங்கை நேரம் 3.00 மணியளவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தங்கமணி - 077 169 7788
கமலமணி - 076 904 3888

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 8368) 1/6

## யாழ். மாநகர எல்லைப் பகுதிக்குள் தமிழ்ப் பெரியார்களுக்கு சிலைகள்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் தமிழ்ப் பெரியார்களான பாரதியார் மற்றும் விபுலா னந்தரின் சிலைகள் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

பாரதியார் மற்றும் விபுலானந்தர் ஆகியோரின் சிலைகளே யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியின் ஓட்டுமடம் பகுதியிலுள்ள வளைவில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-125)

# மரண அறிவித்தல்

பிறப்பு
08
.
04
.
1944



இறப்பு
26
.
12
.
2021

## இராசதுரை இராஜேஸ்வரன் (விக்கினா)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை இராஜேஸ்வரன் அவர்கள் கடந்த (26.12.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை கணேஸ்வரி தம்பதியினரின் மூன்றாவது மகனும் நல்லம்மா அவர்களின் பாசமிகு கணவரும், வினோபா (லண்டன்), சுஜித்தா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பஞ்சசீலன், சுரேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஓவியாவின் அன்புப் பேரனும், லோகேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் கணேஸ்வரன் (அவுஸ்ரேலியா), காலஞ்சென்ற வினோதினி மற்றும் நகுலேஸ்வரன், (மட்டக்களப்பு), நந்தினி, ராஜினி, ஜெகதீஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற இந்திரேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும், ரங்கநாயகி (கிச்சி), இராஜேஸ்வரி, சாந்தினி, ஞானமாணிக்கம் காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் ஆனந்தகுமார், பாமினி, கலாரஞ்சிதம், பரஞ்சோதி, திருச்செல்வம், சுசீலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொக்குவில் மேற்கு
021 205 2010

(CS 41904) (3/6)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மண்ணுலகில்
16.07.1940

விண்ணுலகில்
27.12.2021

## பொன்னையா முத்துலிங்கம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் கோவிலாக்கண்டி மேற்கு தச்சன் தோப்பு வேலம்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா முத்துலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் மனோன்மணியின் பாசமிகு கணவரும், செல்வராணி, பத்மநாதன், சிவராசா (ஜேர்மன்), அம்பிகைஈஸ்வரன் (பிரான்ஸ்), கௌரி, சிவா (ஜேர்மனி), சிவந்தினி (கொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தராசா, நந்தினி, ஜீவா, மதியழகன், றாஜி, திவ்யா, மாதவன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், காலஞ்சென்ற தனலக்சுமி மற்றும் பரமேஸ்வரி, மகேஸ்வரி, கமலாம்பிகை, புவனேஸ்வரி காலஞ்சென்ற சோதிலிங்கம், பாலன், காலஞ்சென்ற கேதீஸ் மற்றும் தர்மராசா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான ராசம்மா, லக்சுமி மற்றும் சுப்பையா, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரதாபன், சசிதரன், சர்மிலா, நிரோஜன், கஜேந்திரன், பவீலன், அபி, அபிராமி, சரவணன், குபேரன், கார்த்திகேயன், தனுசிகன், சயானிகா, சிந்துயன், டனுசிகா, திரிஸ்ரிகா, அச்சுதன், கீர்த்திகா, கம்சிகா, கபில், சியானு, தீபிகா, சர்மிகா, மதுசியா, மெரிசா, ரோசினி, மதுசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வேலம்பிராய் பிணமுருங்கை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 41905) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 20 நாள்களில் 227 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 29

வடக்கில், நவம்பர் மாதத்தில் மட்டும் டெங்குத் தொற்றால் 44 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயினும் இந்த மாதம் 20ஆம் திகதிவரை 227 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் டிசெம்பர் மாதத்தில் 165 பேரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் டிசெம்பர் மாதத்தில் 92 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலை தொடருமாயின், ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நோய்த்தொற்று எண்ணிக்கை அதிகரிக்கும்.

மேல் மாகாணத்திலேயே டெங்குப் பரவல் தீவிரமான நிலையில் காணப்படுகின்றது. இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் ஏனைய மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தில் கட்டுப்பாடு காணப்பட்டது. அதனால், வடக்கில் டெங்கு நோய் பரவல் குறைவாக இருந்தது. தற்சமயம் மேல் மாகாணத்துக்கு பலரும் சென்று வருகின்றனர். அதனால், டெங்கு நோய் தீவிரமடையக்கூடிய நிலைமை காணப்படுகின்றது. எனவே, பொதுமக்கள், உங்களுடைய வாழ்விடங்கள், வதிவிடங்கள் என்பவற்றை சுத்தம்செய்து தூய்மையாக வைத்திருக்க வேண்டும். வடக்கில் ஜனவரி மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரை டெங்கு நோய்த்தொற்று கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. மிகச் சில சொற்ப எண்ணிக்கையான நோயாளர்கள்தான் குறித்த காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்டனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் நடைமுறைப்படுத்தப்பட்டது. யாழ் .மாவட்டத்தில் எதிர்வரும் ஜனவரி மாதத்திலும் மீண்டும் நான்கு சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில் நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது - என்றார். (கு-125)

*மாநகர...*

எதிர்ப்புத் தெரிவித்து, சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் சபை அமர்விலிருந்து நேற்று வெளியேறியதோடு, சபை முன்பாக வீதியில்போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த 30 ஆம் திகதி மாநகர சபையில் நடைபெற்ற சபைக் கூட்டத்தின்போது, முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆரியகுள திடல் திறப்பு விழாவுக்கான அழைப்பிதழ்களை வழங்குவதற்காகச் சென்றிருந்தபோது .பிரதி முதல்வரே சபைக்குத் தலைமை தாங்கினார்.

அதன்போது, யாழ்ப்பாணத்திலுள்ள 24 கடைத்தொகுதிகளுக்கான புதிய ஒப்பந்தத்தை கோருவதற்காக குறித்த கடைத்தொகுதிகளை பாவனையில் வைத்திருப்பவர்களிடம் உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஆரம்பக்கட்டமாக 20 சதவீதக் கட்டணம் அறவிடுவது என்றும், மிகுதித் தொகையை மூன்று தவணைகளில் அறவிடுவது என்றும் சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது.

இந்தநிலையில், மாதாந்த மாநகரசபைக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது, மாநகர முதல்வர், "குறித்த கடைத்தொகுதி தொடர்பான விடயத்துக்கு தொடர்ச்சியாக முன்னின்று செயற்பட்டவன் நான். நான் வழங்கிய நிகழ்ச்சி நிரலுக்கு மேலாக பிரதி முதல்வர் ஈசன், குறித்த தீர்மானத்தை முன்னிறுத்தியுள்ளார். ஆகவே, என்னுடைய அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானத்துக் குரிய அறிக்கையில் கையொப்பமிடமாட்டேன்" என்று கூறினார்.

அதன்போது, "சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மற்றைய விடயங்களை ஏற்றுக்கொள்ளும் நீங்கள், எவ்வாறு இதற்கு கையொப்பமிடாமல் இருக்கமுடியும்?" என்று, சபை உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர்.

மேலும், "உங்களுக்கு நம்பிக்கையற்ற ஒருவர் பிரதி முதல்வராக சபையை நடத்த எவ்வாறு அனுமதி வழங்கினீர்கள்?" எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ரஜினிகாந், கிருபாகரன் ஆகிய உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர்.

அதன்பின்னர் நாங்கள் வெளிநடப்பு செய்கின்றோம் என்று கூறிவிட்டு சபையிலிருந்து வெளியேறினர். இதைத்தொடர்ந்து மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

வெளிநடப்புச் செய்த உறுப்பினர்கள், அதன்பின்னர் ஒன்றிணைந்து மாநகரசபையின் பிரதான வாயிலை மறித்து போக்குவரத்தை முடக்கும் வகையில், போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, "அடிக்காதே அடிக்காதே வர்த்தகர்களின் வயிற்றில் அடிக்காதே, சபையின் மாண்பைக் காப்பாற்று, முதல்வர் அராஜகம் ஒழிக, தமிழ்த் தேசியத்தை நீக்காதே, கொச்சைப்படுத்தாதே கொச்சைப்படுத்தாதே பிரதி முதல்வரை கொச்சைப்படுத்தாதே" போன்றவாறு கோஷங்களை எழுப்பி சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக போராட்டத்தில் ஈடுபட்டனர். (கு-125)

*பாம்பு....*

உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அனலைதீவு ஐந்தாம் வட்டாரப் பகுதியைச் சேர்ந்த கார்த்திகேசு ரவீந்திரன் (வயது - 47) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். அவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

கடந்த 16 ஆம் திகதி வீட்டு முற்றத்தில் அவர் நின்றபோது இனம் தெரியாத வகைப் பாம்பு ஒன்று அவரைத் தீண்டியுள்ளது. அதற்குச் சிகிச்சைபெற்று மறுநாள்வீடுதிரும்பியிருந்தார். எனினும், கடந்த 26ஆம் திகதி அவருக்குத் திடீரென மயக்கம் ஏற்பட்டுள்ளது.

அதனையடுத்து அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்றுக்காலை உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (கு-25-26)

*தெங்கு...*

வுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் தெங்கு உற்பத்தியை பெறுமதி சேர்த்து ஏற்றுமதி செய்யும் நோக்கிலும், தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பணிகளை மேம்படுத்தி வடக்கிலும் விஸ்தரிக்கும் நோக்கிலும் வடக்கு மாகாணப் பிராந்திய அலுவலகமொன்று அடுத்தாண்டு ஆரம்பத்தில் பளையில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை- வடக்கு மாகாணம் இலங்கையின் 3ஆவது தெங்கு முக்கோண வலயமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்கள் இலங்கையில் அதிக தெங்கு உற்பத்தி செய்யும் மாவட்டங்களின் பட்டியலில் புதிதாக இணைந்துள்ளன. (கு-இ)


மணிவதனன் ஜெயச்சித்திரா சோதரரின்
27ஆம் ஆண்டு ஞாபகார்த்த
கரம் சுற்றுப் போட்டி

மணி விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட கரம் சங்கத்துடன் இணைந்து நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான
கரம் சுற்றுப் போட்டி

காலம் : 08, 09, 01.2022
இடம் : கொக்குவில் இந்துக்கல்லூரி

ஒற்றயர் இரட்டையர் மற்றும் ஐந்து பேர் பங்கு பற்றும் போட்டி யாகவும் நடைபெறும்.

விண்ணப்ப முடிவு திகதி : 07.01.2022

தொடர்புகளுக்கு : ஆசிரியர் திரு. குமரேசன்
077 786 3198

கொக்குவில் இந்துக் கல்லூரி – யாழ்ப்பாணம்.

(CS 41906) (3/6)

விளம்பர அனுசரணை : V.S.P லஞ்சுயில்
இல. 26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: திருமதி. பாஸ்கரன்
021 222 4135, 021 222 9165



கண்ணீர் அஞ்சலி



சங்க உறுப்பினர் திரு.தி.திருச்செல்வம் அவர்களின் பாசமிகு தந்தையார்

பொன்னம்பலம் திருநாவுக்கரசு

அவர்கள் 28.12.2021 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
பளை

(CR 36918) (3/6)



மரண அறிவித்தல்



அருட்சகோதரி மேரி ஆன் மனுவல் தி.கு

நாரந்தனை. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி ஆன் மனுவல் தி.கு (28.12.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார். அன்னாரின் இறுதிப் பயணத் திருப்பலி (29.12.2021) புதன்கிழமை பிப 03.30 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், அவரது நல்லுடல் இளவாலை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

தகவல்:
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
அருட்சகோதரி தியோபிலின் குருஸ் மாகாணத் தலைவி.



கண்ணீர் அஞ்சலி



யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறையில் 1975ம் ஆண்டு விரிவுரையாளராக இணைந்து 1991ம் ஆண்டு வரை கடமையாற்றிய முன்னைநாள் சிரேஷ்ட விரிவுரையாளர்

திரு. அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை

அவர்கள் 27.12.2021ஆம் திகதி அன்று கனடாவில் இறைபதமடைந்ததையிட்டு நாம் மிகுந்த வேதனையடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புவியியற்றுறை சமூகம், யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

(CS 41906) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்தான...

அவர் அனுப்பிய கேள்வி - பதில் அறிக்கையில் இது உள்ளிட்ட பல விடயங்களை அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஊடகவியலாளர் கேள்வி: கடந்த தேர்தலில் உங்கள் கட்சி முன்வைத்த விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு சர்வதேச சமூகத்தினால் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாகவே பெறப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால், தற்போது 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தீர்வைப்பெறும் முயற்சிகளை நீங்கள் முன்னெடுத்திருப்பது ஏன்?

**பதில்:**

எங்களுடன் சேர்ந்து பல தமிழ்க் கட்சிகள் அண்மையில் கூடி 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்தியாவை வலியுறுத்துவதற்கு எடுத்த தீர்மானத்துக்கும் எமது அரசியல் தீர்வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஏற்கனவே இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பிலும், 13 ஆவது திருத்தச் சட்டத்திலும் இருக்கும் ஒருசில சாதகமான விடயங்களை எமது தற்பாதுகாப்புக்காக பயன்படுத்துவதற்கு முயற்சிக்கும் ஒரு நடவடிக்கையே இது. இதனை நான் தற்போது மட்டும் கூறவில்லை. நான் முதலமைச்சராக இருந்தபோதே வலியுறுத்தியிருந்தேன்.

நில அபகரிப்பு, போரின் பின்னைய வறுமை, சமூகச் சீர்கேடு, இராணுவ மயமாக்கல் ஆகியன காரணமாக ஆபத்தின் விளிம்பில் இருக்கும் எமது தேசத்தைப் பாதுகாப்பதற்கு சில நடவடிக்கைகளை நாம் அவசரமாக முன்னெடுக்க வேண்டியுள்ளது.

தேசத்தை இழந்துகொண்டிருக்கிறோம் "தீர்வு வரும், தீர்வு வரும்" என்று நாம் காலத்தை இழந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு கணமும் நாம் எமது தேசத்தை இழந்துகொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை. ஆகவேதான் நிரந்தரமான அரசியல் தீர்வை நாம் பெற்றுக்கொள்ளும்வரையில் இருப்பவற்றைப் பாதுகாப்பதற்கு ஏற்கனவே சட்டத்தில் இருக்கும் அதிகாரங்களை நாம் எவ்வாறு பயன்படுத்தலாம் என்று முயற்சிக்க வேண்டியுள்ளது.

**உண்மைக்கு மாறான கருத்து**

தற்போது எமக்கு நாம் விரும்பும் ஒரு தீர்வை பெற்றுக்கொள்ளும் காலம் கனிந்துவிட்டதாகவும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இதனால்தான் வலியுறுத்துகின்றோம் என்பதுபோலவும் உண்மைக்கு மாறான கருத்துக்கள் கூறப்பட்டுவருகின்றன.

**தவறுகளிலிருந்து பாடம் படிக்கவேண்டும்**

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோருவது எமது சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வுக்கான கோரிக்கையைப் பாதிக்க முடியாது. ஆகவே, தவறுகளிலிருந்து நாம் பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

தீர்வுக்கான எமது நடவடிக்கைகளும் ஒற்றையாட்சியின் கீழ் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எமது முயற்சிகளும் வெவ்வேறானவை.

**மோசமாகிறது நிலைமை**

நாம் சட்டப் புத்தகத்தில் இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோருவது நாளுக்கு நாள் எமது நிலைமை மோசமாகிக்கொண்டு வருவதைத் தடுக்கவே.

தமிழ் மக்களுக்கான நிறைந்த இறுதித் தீர்வு சர்வதேச சமூகத்தால் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாகவே நடைபெற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. தமிழ்க் கட்சிகள் காலம் காலமாக சமஷ்டியை ஒரு தீர்வாக வலியுறுத்தி வருகின்றன. கூட்டு சமஷ்டியே நிரந்தரத் தீர்வாக அமைய முடியும் என்பது எமது கூட்டணியின் நிலைப்பாடு. இதனை நாம் தீர்மானிக்க முடியாது. எமது மக்களே தீர்மானிக்க வேண்டும். அதனால்தான் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு நாம் கோரிக்கை முன்வைத்திருக்கின்றோம். இதனை இந்தியாவிடமும் நாம் வலியுறுத்தி உள்ளோம்.

**இழந்துவிடக்கூடாது**

ஆனால், சர்வஜன வாக்கெடுப்பு இன்று நடக்கும் என்று எதிர்பார்த்திருந்து எமது நிலத்தையும் மக்களையும் நாம் இழந்துவிடக்கூடாது. ஒவ்வொருநாளும் எமது நிலம் பறிபோகின்றது. பெருமளவில் எமது மக்கள் வெளியேறுகின்றார்கள். ஆகவேதான், ஏற்கனவே இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி சில வலுவூட்டும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளோம்.

**சிறந்த உத்தி காலம் கடத்துவதே**

இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரையில், தமிழ்த் தேசத்தை இல்லாமல் செய்வதற்கான பெரும் திட்டங்களை அவர்கள் பல காலத்துக்கு முன்பிருந்தே வகுத்திருக்கின்றார்கள். தமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கான அவர்களின் மிகச் சிறந்த உத்தி, காலத்தைக் கடத்துவதுதான். காலங்கடத்தி சிறிது சிறிதாக வடக்கு - கிழக்கை ஆக்கிரமிப்பதே அவர்களின் குறிக்கோள்.

**அம்பாறையாக மாறவுள்ள முல்லைத்தீவு**

கடந்த 12 வருடங்களில் சிறிய அதிகாரத்தைக் கூட எமக்கு வழங்காமல் காலத்தை இழுத்தடிப்புச்செய்ததன் மூலமே எம்மை அவர்கள் பலவீனப்படுத்தி இருக்கின்றார்கள். வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாகப் பிரிப்பதற்கும், முல்லைத்தீவை அம்பாறை போல மாற்றுவதற்கும் அவர்களுக்கு இன்னமும் சிறிது காலம் மட்டுமே தேவைப்படுகின்றது.

தமிழ் மக்கள் தம்மைத் தாமே பாதுகாப்பதற்கான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளவிடாமல் எவ்வளவுக்கு எவ்வளவு காலத்தை இழுத்தடிக்க முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு தமிழ்த் தேசத்தை நிர்மூலம் செய்ய முடியும் என்பது அவர்களின் கணிப்பு. அதுதான் உண்மையும்கூட. புள்ளிவிவரங்கள் அதைத்தான் எடுத்துக்காட்டுகின்றன.

மலையகத் தமிழர், முஸ்லிம்கள்

வடக்கு - கிழக்கு முஸ்லிம் தலைவர்கள் சிலர் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் அது முஸ்லிம் மக்களுக்கு பாதகம் விளைவிக்கக்கூடும் என்று எண்ணுகின்றார்கள். இது தவறு. வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்கள் சிந்திக்க வேண்டிய ஒரேயொரு விடயம் தமது முஸ்லிம் அலகு தமிழ்ப் பேசும் பிரதேசமாக வடக்கு - கிழக்கினுள் இருக்க வேண்டுமா? அல்லது சிங்கள பெரும்பான்மையினர் வசம் இருக்க வேண்டுமா? என்பது.

சிங்களப் பெரும்பான்மையினர் வசம் சென்றால் தமக்கு என்ன நடக்கும் என்பதை முஸ்லிம் சகோதரர்கள் கடந்த சில வருடங்களுக்குள் உணர்ந்திருப்பார்கள். வடக்கு - கிழக்கில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களை ஒன்று சேர்த்து சமஷ்டி முறையிலான முஸ்லிம் அலகின் கீழ்க் கொண்டு வருவது சிரமமல்ல. அதேபோன்று மலையகத் தமிழ் மக்களும் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களை ஒன்று சேர்த்து சமஷ்டி முறையிலான மலையகத் தமிழர் அலகை ஸ்தாபிப்பதும் சிரமமல்ல.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு இஸ்லாமிய மக்களின் தலைவர்களும் மலையக மக்களின் தலைவர்களும் எம்முடன் சேர்ந்து ஒருவருக்கொருவர் பலமாக இருப்பதே தற்போதைய அவசரமான தேவையாகும் - என்றுள்ளது. (த)

கிளிநொச்சியில்...

ஸ்கந்தபுரம் மரப்பாலம் பகுதியில் பொதிசெய்யப்பட்டநிலையில், நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.

சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையிலேயே குறித்த சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

லண்டனில் மகனுடன் வசித்துவந்த இராசேந்திரம் இராசலட்சுமி (வயது - 67) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

அவர், கிளிநொச்சி உதயநகர் பகுதியிலுள்ள தனது காணியை பார்ப்பதற்காக அம்பாள்குளம் பகுதியில் வாடகைக்கு வீடெடுத்து தங்கியிருந்துள்ளார்.

அவர் தனியாக வசித்து வந்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் வங்கிக்குச் சென்று திரும்பியிருந்தார். அதன்பின்னர், பிற்பகல் 3 மணிக்கும் 6 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் அவர் காணாமற்போயுள்ளார்.

அவர் காணாமற்போன விடயம் நேற்றுமுன்தினம் இரவு 7.20 மணியளவிலேயே உறவினர்களுக்குத் தெரியவந்துள்ளது.

அவர் காணாமற்போயுள்ளமை தொடர்பில் வீட்டு உரிமையாளரால் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து சம்பவ இடத்துக்குச்சென்ற கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். அவர் தங்கியிருந்த வீட்டினுள்ளே குருதிக்கறைகள் காணப்பட்டமையை பொலிஸார் அவதானித்தனர். அதன்படி, அந்தப் பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற அடிப்படையில் பொலிஸார் விசாரணையை முடுக்கிவிட்டனர்.

விசாரணைகளின்படி, அம்பாள்குளம் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே, மூதாட்டியின் கொலை தொடர்பான மர்மங்கள் துலங்கத் தொடங்கின.

அந்தச் சந்தேகநபரின் வாக்குமூலத்தின் அடிப்படையில், மூதாட்டி தங்கியிருந்த வீட்டிலிருந்து சுமார் 18 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஸ்கந்தபுரம் மரப்பாலம் பகுதியில் கொலையுண்டவரின் சடலம் பொதிசெய்யப்பட்டு வீசப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

குறித்த பாலத்தில் அதிகளவான முதலைகள் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதுமட்டுமன்றி, குறித்த மூதாட்டியை, இன்னொருவரின் உதவியுடனேயே சந்தேகநபர் மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்று வீசியுள்ளார் என்பதும் விசாரணையில் இருந்து வெளிப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்ட பெண், பூநகரி, தம்பிராய் பகுதியைச் சேர்ந்தவர். அவரது 5 பிள்ளைகளும் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர். கணவர் விவசாயம் செய்துவருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-6,214)

பணியின் போது...

பொலிஸ் அலுவலர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இருவரும், நேற்று நண்பகல் கொடிகாமம் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அதன்போது மேற்கொள்ளப்பட்ட விசேட பொலிஸ் பரிசோதனையின்போது, அவர்கள் இருவரும் மதுபோதையில் இருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து குறித்த இருவரிடமும் சாவகச்சேரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசேட விசாரணை மேற்கொள்ளப்பட்டநிலையில் குற்றம் உறுதிசெய்யப்பட்டது என்றும், அதனையடுத்து, குறித்த இரு பொலிஸ் அலுவலர்களும் மறு அறிவித்தல்வரை பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-125)

வெடிபொருள்கள்...

ரிவு பாடசாலையின் பின்பகுதியிலுள்ள காணியிலேயே இவை மீட்கப்பட்டன.

கிளிநொச்சி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த வெடிபொருள்கள் தொடர்பில் பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் தகவல் வழங்கப்பட்டது.

அதனையடுத்து, பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பிரதேசத்துக்குப் பொறுப்பான இராணுவத்தினர் இணைந்து குறித்த அகழ்வுப் பணியை நேற்று மேற்கொண்டனர்.

அதன்படி,

12.7 ரக துப்பாக்கி - 01, அதற்குரிய ஸ்ராண்ட் - 02, ஆர்.பி.ஜி. துப்பாக்கி - 03, ரி - 57 ரக துப்பாக்கி - 06, ரி - 81 ரக துப்பாக்கி - 03, ஆர்.பி.ஜி. ஷெல் - 10, இயக்க தாமத கடத்திகள் - 11, அணைக்கட்டு தகர்க்கும் ஆயுதம் - 05, எல்.எம்.ஜி. ரவைகூடு - 09, 12.7 துப்பாக்கி கூடு 01, எம்.பி.எம்.ஜி. கூடு - 01, 12.7 ரவை செயின் 08 ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

குறித்த துப்பாக்கிகள் மற்றும் குண்டுகள் துருப்பிடித்துக் காணப்படுகின்றன. அவை செயற்றிறன் உள்ளவையா என்பது தொடர்பில் ஆய்வுசெய்யப்பட்டு, நீதிமன்றின் உத்தரவுக்கு அமைவாக செயலிழக்க வைக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வெடிபொருள்கள் மீட்கப்பட்ட தனியார் காணியில் முன்னர் விடுதலைப்புலிகளின் முகாம் காணப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது. (த-6-113)

வல்வெட்டித்துறை...

அமைச்சின் ஆதரவுடன் "வல்வெட்டித்துறை சர்வதேச பட்டத் திருவிழா 2022" என்ற பெயரிடலோடு பிரமாண்டமாக நடைபெறவுள்ளது.

குறித்த பட்டத் திருவிழா ஏற்பாட்டுக் குழுவினருக்கும் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இந்தச் சந்திப்புக்கான ஏற்பாட்டை பிரதமரின் ஒருங்கிணைப்பாளரான கீதநாத் காசிலிங்கம் மேற்கொண்டிருந்தார்.

அதன்போது "வல்வெட்டித்துறை சர்வதேச பட்டத்திருவிழா 2022" போட்டியை கோலாகலமாக நடத்துவதற்கு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் முழு ஆதரவை வழங்குவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஆண்டுதோறும் தைப்பொங்கல் தினத்தில் யாழ். வல்வெட்டித்துறை கடற்கரையில் பட்டத் திருவிழா நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து விக்கிரகத் திருட்டு தடுத்து நிறுத்துங்கள்!

## கட்டளைத்தளபதியிடம் நல்லை குரு முதல்வர் கோரிக்கை



**யாழ்ப்பாணம், டிசெ.29**

**நல்லூர் ஆதீன குரு முதல்வருக்கும், புதிதாகப் பதவியேற்றுள்ள யாழ்ப்பாணம் மாவட்டக் கட்டளைத் தளபதிக்கும் இடையே நேற்று சந்திப்பு ஒன்று நடந்துள்ளது. மரியாதை நிமித்தம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது என்று நல்லூர் ஆதீன குரு முதல்வர் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நிலை தொடர்பில் கட்டளைத் தளபதி விளக்கமாகக் கேட்டறிந்து கொண்டார். அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்து விக்கிரகங்கள் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்துஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்படு வதை தடுத்து நிறுத்தவேண்டும் என்று கோரினேன்.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களில் மக்களின் வழிபாட்டுக்கு இடமளிக்க வேண்டும் என்றும், இனங்களிடையிலான விரிசல் நிலையை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோரினேன் - என்றார். (எ-27)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் வீடு ஒன்றின் முன் பகுதி வாடகைக்கு வழங்கப்படும். வர்த்தக, கல்வி நிறுவனங்கள் மாத்திரம் தொடர்புகொள்ளவும். (CS 41832)(3.6)

077 517 9106, 076 924 9851

## வேலையாட்கள் தேவை

மாங்களா நிறுவன களஞ்சியத்திற்கு வேலையாட்கள் தேவை. (ஆண்கள்)

தொடர்புகளுக்கு:

077 9496 855, 077 420 8084

536, K.K.S. Road,
Manohara Junction, Jaffna.

(CS 12591 1-6

## தவறிவிட்டது

கடந்த 27.12.2021 அன்று காலை வவுனியாவில் இருந்து யாழ் நோக்கி வந்த பேரூந்தில் கைத்தொலைபேசி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் **தொடர்பு கொள்ளவும்** **076 767 6712** தகுந்த சன்மானம் வழங்கப்படும். (CS 41890) (3/6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு முத்துமாரி அம்மன் அருகாமை 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். கல்வியங்காட்டு சந்தியில் (கல்வியங்காட்டு சந்தை) இருந்து 1 km தூரம். (1 பரப்பு 8 லட்சம்)

077 6585 999, 077 6234 204

(CS 12611) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோண்டாவில் பொற்பதி வீதியில் உள்ள காளி கோவில் அருகாமையில் உள்ள வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (பொற்பதி வீதியிலிருந்து 50 m தூரம்)

076 8909 259, 077 015 0353

(CS 12618) 1-6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அச்சுவேலி பருத்தித்துறை மெயின் றோட்டுடன் 3 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. (அச்சுவேலி பஸ் தரிப்பிடத்தில் இருந்து 500 m தூரம்

077 911 6983, 077 288 0152

(CS 12610) 1-6

*நாட்டின் நிதிநிலைமையைப் பயன்படுத்தி*

## சர்வதேச அபிலாஷைகள் இலங்கைக்குள் திணிப்பு

*விமல் வீரவன்ஸ தெரிவிப்பு*



கொழும்பு, டிசெ. 29

நீண்ட நாள்களுக்குப் பின்னர் நாட்டில் மீண்டும் 13ஆம் திருத்தம் குறித்தும், இந்தியாவின் அழுத்தம் குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்படுவதுடன், இது குறித்து சிறுபான்மைக் கட்சிகளின் சில முயற்சிகளும் வெளிப்படுகின்றன. இவையனைத்தும் சர்வதேச சக்திகளின் தலையீட்டால்தான் இடம்பெறுகின்றன என்று தெரிவித்தார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாடு சகல விதத்திலும் பலவீனமடைந்து சென்றுகொண்டுள்ள நிலையில் அதனைச் சாதகமாகப் பயன்படுத்த சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன. நாடு இன்று பெரும் நெருக்கடி நிலைமைகளை எதிர்கொண்டு வருகின்ற நிலையில் விரும்பியோ, விரும்பாமலோ ஒருசில இறுக்கமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தை நாடவோ அல்லது வெவ்வேறு நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்ளவோ வேண்டியுள்ளது. இந்த முயற்சிகளின் போதும் நாட்டின் பலவீனத்தை கருத்தில் கொண்டு தத்தமது நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தவும் சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன. குறிப்பாக 13ஆம் திருத்தம் என்ற கதைகள் மீண்டும் பொது விவாதத்துக்கு வருகின்றது. இந்த வேலைத் திட்டங்களின் பின்னணியில் சர்வதேச நிகழ்ச்சி நிரலே இருக்க முடியும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு வெவ்வேறு நாடுகளும் தமது அரசியல் பொதியை முன்வைக்க நினைக்கின்றன. ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகைக்காக ஐரோப்பிய ஒன்றியம் சில நிபந்தனைகளை முன்வைக்க முயற்சிக்கும். ஆகவே நாம் மிகவும் அவதானமாகத் தீர்மானம் எடுக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் - என்றார். (ம)

## முடிவுக்கு வந்தது ரயில் அதிபர்கள் சங்கப் போராட்டம்

கொழும்பு, டிசெ. 29

உயர் அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சின் போது, சாதகமான தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன. அதனால், தமது தொழிற்சங்கப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று, ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு குறித்த சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

சில நாள்களாக குறித்த போராட்டத்தை சங்கத்தினர், விரிவுபடுத்திக் கொண்டுவந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

## மலேரியா மாத்திரைகளை உட்கொள்ளத் தவறாதீர்கள்

வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் ஆலோசனை



யாழ்ப்பாணம், டிசெ. 29

மலேரியாத் தொற்று காணப்படுகின்ற நாடுகளுக்குச் செல்பவர்கள் (இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகள்), இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், மலேரியா தடுப்பு மாத்திரைகளை ஒரு வாரத்துக்கு இரண்டு என்ற அடிப்படையில் உட்கொள்ளவேண்டும். பின்னர், அத்தகைய நாடுகளில் வசிக்கும் காலப்பகுதியில் வாரத்துக்கு இரண்டு மாத்திரைகளை உட்கொள்ளவேண்டும் - என்று, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில், தென்னாபிரிக்காவிலிருந்து நாடு திரும்பியவர்களில் மல்லாகம் மற்றும் ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவருக்கு மலேரியாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருபவர்கள், இங்குவந்த பின்னரும் ஒரு மாதத்துக்கு (4 வாரங்கள்) அத்தகைய மாத்திரைகளை வாரத்துக்கு இரண்டு வீதம் உட்கொள்ள வேண்டும்.

மலேரியாத்தடுப்பு மாத்திரைகள் மூலமாக மலேரியா தொற்றாது. உங்களையும் உங்கள் சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ளலாம்.

இப்படிப்பட்ட நாடுகளுக்குச் சென்று வருபவர்களுக்கு மலேரியாத்தொற்று இருக்கலாம். குருதிப் பரிசோதனை செய்துகொள்வதன் மூலம் இந்த நோயை அறிந்துகொள்ளலாம். மலேரியாத் தொற்றுநோய் அறிகுறிகள் காணப்படின், உங்களுக்கு அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளுங்கள் - என்று தெரிவித்தார். (த-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.